தேம்பாவணி

1848.38

[illegible]

പു. 10, ലക്കം 1. Jan - Feb. 1918

[illegible]
[illegible]
[illegible]
184838

# ஜனாபிமானி.

| | | |
|---|---|---|
| தபால் சார்ஜ் உள்பட வர்ஷ சந்தா | ரூபா | |
| உள்நாடு | 4. | |
| வெளிநாடு | 6. | |

THE

JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. | பிங்கள௵ தைமீ, JAN.—FEB. 1918. | ஸஞ்சிகை 1. No. 1.


## EDITORIAL NOTES.
## பத்ராதிபர் குறிப்புகள்.

**சிறுவர்களைப் பற்றிய மசோதா.**

— குற்றஞ்செய்த சிறுவர்களையும் சிறுமிகளையும் விசாரிப்பது, தண்டிப்பது ஆகிய இவைகள் விஷயமாகவும், கெட்ட வழியில் ப்ரவர்த்திக்கக்கூடிய அதிபால்யமான சிறுவர்களைப் பாதுகாப்பது விஷயமாகவும் கவர்ன்மெண்டார் ஒரு மசோதா கொண்டுவரப் போகிறார்கள்.

சிறுவர்களை நல்வழியில் திருத்தி அவர்களுக்கு ஜீவனோபாயமாக ஏதாவது தொழில் கற்றுக்கொடுத்து பிற்காலத்தில் அவர்கள் யோக்யமாக ஜீவிக்கவேண்டியதற்காக இரண்டு வகைப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படும். ஒன்றில் குற்றஞ்செய்த சிறுவர் சிறுமிகளை ஏற்றுக்கொண்டு அவர்களை நல்வழியில் பழக்கி ஏதாவது தொழில்கள் கற்றுக்கொடுப்பார்கள். இவைகளுக்கு ரெபர் மேட்டரி ஸ்கூல் அதாவது சீர்திருத்தப் பள்ளிக்கூடங்கள் என்று பெயர். குற்றஞ் செய்தவர்கள் 12-வயதுக்கு மேலும் 16-வயதுக்குள்ளும் இருந்தால், அவர்களை இந்த ஸ்கூல்களுக்கு அனுப்புவார்கள். குற்றஞ் செய்யக்கூடும் என்று தோன்றும் சிறுவர்களையும், குற்றஞ் செய்தவர்களில் 12-வயதுக்குள்பட்டவர்களையும் நல்வழியில் திருப்ப இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் அதாவது கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பார்கள். இந்த இரண்டாவது பாடசாலைகளை பொது ஜனங்களும் ஏற்படுத்தலாம். ஆனால் அவைகளை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவேண்டும். 12, 13-வயஸுள்ள குற்றவாளிகளையும் சிலஸமயம் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாம். பெற்றோர்களால் அலக்ஷ்யம் செய்யப்பட்ட சிறுவர் சிறுமிகளையும் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம்.

**மசோதாவின் முக்யாம்சங்கள்.**

இந்த மசோதாவிலுள்ள சில முக்யமான விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறோம். 16-வயஸுக்குள்பட்ட எந்த சிறுவன் சிறுமியையும் எந்தக் குற்றத்துக்காகக் கைதி செய்தாலும், கோர்ட்டார் உத்திரவின்றி விசாரணைக்குமுன் 24 மணி நேரத்துக்குமேல் ஜெயிலில் வைத்திருக்கக்கூடாது.

14-வயஸுக்குள்பட்ட எந்தக் குற்றவாளி

184 838
சென்னை-600 008

யையும் [illegible] வில் வைப்பதோ, தீவாந்தம் அனுப்புவதோ கூடாது. 14 முதல் 16-வயஸு வரையிலுள்ள குற்றவாளிகளையும் தண்ணீர் மேலேற்றக்கூடாது. வேறு விதத்தில் ஒன்றும் செய்வதற்கில்லையென்றால்தான் சிறையிலடைக்கலாம். மற்றபடி அவர்களை மேற்சொன்ன பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாம் அல்லது வேறு தண்டனைகள் விதிக்கலாம்.

எந்தக் குற்றத்துக்கும் 16-வயஸுக்குள் பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது.

அபராதங்கள் போட்டால் சிறுவர்களுடைய பெற்றோர்கள் கொடுக்கவேண்டும்.

மேற்சொன்ன பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு அவர்களின் பெற்றோர்கள் அதற்காகும் செலவைக் கொடுக்க வேண்டும்.

சில ஸமயங்களில் சிறுவர்களின் பந்துக்கள் அவர்களை சரிவரப் பாதுகாத்துவருவதாக முன்வந்தால், அவர்கள் வசம் சிறுவர்களை விடலாம். சிறுவர்களுடைய குற்றங்களை விசாரிக்க அங்கங்கே சிறுவர்களுக்கான கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படும். அங்கே கோர்ட்டதிகாரிகள் ஸாதாரணக் கோர்ட்டுகளின் சட்டக் கட்டுப்பாடுகளில்லாமல் கேஸை நன்றாக விசாரிக்கக்கூடும். தனியான கோர்ட்டுக்கட்டிடங்கள் இல்லாவிட்டால், ஸாதாரணக் கோர்ட்டுகளில் தனி அறைகளிலாவது, அதுவும் முடியாவிட்டால், ஸாதாரண கேஸுகள் நடக்காத காலங்களிலாவது கேஸுகளை விசாரிக்கவேண்டும். இந்த பால கோர்ட்டுகளுக்கு பொது ஜனங்கள் வரக் கூடாதென்ற நிபந்தனை யொன்றுமில்லை. அவச்யமானால் அவர்கள் வரக்கூடாதென்று ரூல் ஏற்படுத்துவார்கள்.

மேற்சொன்ன ஸ்கூல்களில் பையன்களையும் பெண்களையும் சேர்த்துக்கொண்டால், கூடிய மட்டும் அவர்கள் எந்த மதமோ அந்த மத போதனை கற்றுக்கொடுக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முயலுவார்கள்.

**பொது ஜனங்களின் கடமை.**

இந்தச் சட்டம் விஷயமாக நம்மவர்கள் கவனிக்கவேண்டியது ஒன்று இருக்கிறது. அதாவது பற்பல இடங்களில் சிறுவர்களை ஏற்று அவர்களை நல்வழியில் பழக்கி ஏதேனும் தொழில் கற்றுக்கொடுத்து நல்லவர்களாகச் செய்ய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதே. கவர்ன்மெண்டார் தேசமெங்கும் ரிபர்மேடரி ஸ்கூல்களாவது, கைத்தொழில் ஸ்கூல்களாவது ஏற்படுத்த வெகு காலஞ்செல்லலாம். இதற்குப் பணச்செலவு அதிகமாகு மாகையால், இதில் அபிவ்ருத்தி தாமஸமாகவே ஏற்படும். நம்மவர்கள் இது விஷயம் முன் வராவிட்டால், கிறிஸ்தவப் பாதிரிமார்களும் இரக்ஷண்ய சேனையாரும் முன் வந்து இவைகளை ஸ்தாபித்து சிறுவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடும். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் பிள்ளைகளும் சிறுமிகளும் சேர்ந்திருப்பதில் அவர்கள் கிறிஸ்தவர்களாகக் கூடும். பிற்பாடு நாம் பாதிரிகளும் இரக்ஷண்ய சேனையாரும் நமது சிறுவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி விடுகிறார்களே என்று குறைகூறுவதைவிட, நமது தேசத்துப் பரோபகாரிகள் சிறுவர்களுக்கான கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து மேற்கண்ட குற்றவாளிகளையும் குற்றம் செய்யக்கூடுமென்று தோன்றும் சிறுவர்களையும் ஏற்றுக்கொண்டால் தேச நன்மைக்கு அனுகூலமாக இருக்கும்.

**ஜாதிகளும் கோவாபரேஷனும்.**

சென்ற டிஸம்பர் மாஸத்தில் நடந்த கோவாபரேடிவ் கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாயிருந்த ஆனரபிள் மிஸ்டர் பி. ராஜகோபாலாசாரியர் கோவாபரேடிவ்



J— N09 N18.101

ஸங்கங்களுக்கு எல்லா ஜாதிகளிலிருந்தும் மெம்பர்கள் வந்திருக்கிறார்களென்றும், இதனால் இந்தக் கோவாபரேடிவ் முயற்சி ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு மாத்ரம் பயன்பட்டு வருவதாயிராமல், எல்லா வகுப்பார்க்கும் பயன்பட்டு வருவதாய் முற்றிலும் தேசிய முயற்சியாக இருக்கிறதென்று தெரிவித்தார்.

இப்படிச் சொல்வது சரியல்லவென்று ஒரு கோவாபரேடர் பத்ரிகைகளில் எழுதியிருக்கிறார். ஏனென்றால் ப்ராம்மண வகுப்பு மாத்ரம் இதர வகுப்புகளைவிட இந்த ஸங்கங்களால் அதிக ப்ரயோஜனமடைந்து வருகிறதாகச் சொல்லுகிறார். இதற்கு அவர் சிலகணக்குகள் தெரிவிக்கிறார். அவை வருமாறு.—

| — | கிறிஸ்தவர்கள். | ப்ராம்மணர்கள். | மகம்மதியர்கள். | பஞ்சமர்கள். | ப்ராம்மணரல்லாத உயர் வகுப்பு ஹிந்துக்கள் |
|---|---|---|---|---|---|
| 1. ஜனத் தொகை. | 11,17,582 | 13,10,368 | 27,40,408 | 60,00,000 | 30,000,000 |
| 2. மொத்தம் மெம்பர் தொகையில் ஜனத் தொகை வீதப்படி ஒவ்வொரு வகுப்பிலும் இருக்க வேண்டிய ஸங்க்யை. | 4,368 | 5,163 | 10,722 | 23,829 | 1,19,119 |
| 3. இப்போது ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள ஸங்க்யை. | 12,134 | 29,236 | 9,011 | 8,000 | 1,02,026 |
| 4. ப்ராம்மணரைப்போல் எல்லாரும் அபிவ்ருத்தியடைய இருக்கவேண்டிய ஸங்க்யை. | 24,268 | 29,236 | 54,066 | 1,20,000 | 6,12,156 |
| 5. ப்ராம்மணர்களைப்போல் ஆக ஒவ்வொரு வகுப்பும் எத்தனை மடங்கு அதிகமாகவேண்டும். | 2 | — | 6 | 15 | 6 |

மேலே காட்டிய அட்டவணையால் கிறிஸ்தவர்கள் கோவாபரேடிவ் ஸங்கங்கள் விஷயத்தில் இரண்டு மடங்கு அதிக ஊக்கம் காட்டவேண்டுமென்றும், மகம்மதியர்கள் 6 மடங்கும், பஞ்சமர்கள் 15 மடங்கும், இதர ஹிந்துக்கள் 6 மடங்கும் ஊக்கங் காட்டவேண்டுமென்றும் தெரிகிறது. ஆனால் இவர்கள் வ்ருத்தியடையும் காலத்தில் ப்ராம்மண மெம்பர்களின் தொகையும் அதிகரிக்குமாதலால், இன்னும் அதிக ஊக்கத்துடன் உழைக்க வேண்டுமென்பது சொல்லாமலே அமையும்.

**விருத்தி யடைய வழி.**

எல்லாருக்கும் கோவாபரேடிவ் ஸங்கங்கள் பயன்படும்படி செய்வதற்கு முன் தாழ்ந்த வகுப்பார் போன்ற அநேக ஜனங்களை நல்வழியில் திருப்பி உயர்ந்த வாழ்க்கை லக்ஷயங்களை அவர்களுக்கு உண்டுபண்ணி அவர்களை உயர்த்தவேண்டியது அவச்யமாகும். ப்ராம்மணர்களைப்போலவே இதர வகுப்புகளிலும் ஸரியானபடி கோவாபரேஷன் அபிவ்ருத்தியடையவேண்டுமென்றால், அவைகளுக்காகவென்று அநேக பரோபகாரிகள் ரொம்பவும் உழைக்கவேண்டும். ஜனங்களிடம் சிக்கன வழக்கமும், கல்வியும், ஸுகாதாரமும் அபிவ்ருத்தியடையும்படி செய்ய வேண்டும். ஸமீபத்தில் கவர்ன்மெண்டார் கௌரவ அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்கள் நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ப்ராம்மணரல்லாத வகுப்புகளிலுள்ள பரோபகாரிகள் இந்த நியமனங்களைப்பெற்று அவரவர்களுடைய ஜாதிக்கு உழைத்தால், கோவாபரேஷன் முன்னேற்றமடைந்து அந்தந்த ஜாதி

கள் நல்ல நிலைமைக்கு வருமென்று சொல்லவும் வேண்டுமோ?

**உப்பின் விலை.**

சென்ற சில மாஸங்களாக உப்பின் விலை ரொம்ப அதிகமாக இருந்து ஏழை ஜனங்களுக்கு கஷ்டம் உண்டாக்கி வந்தது. இனி அந்தக் கஷ்டம் நின்று விடுமென்பதை யறிந்து ஸந்தோஷப்படுகிறோம். கவர்ன்மெண்டார் ஒரு படி உப்பு $1\frac{1}{2}$-அணாவுக்கு மேற்படாமல் விற்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விதம் கவர்ன்மெண்டார் செய்ததற்குக் காரணமென்னவென்றால் சென்ற சில மாஸங்களுக்கு முன் வங்காளத்தில் திடீரென்று கையிருப்பில் இருந்த உப்பு ரொம்பவும் குறைந்து போய்விட்டது. சென்னையில் கடலோரமாயுள்ள உப்பளங்களிலிருந்து பலர் உப்பை அதிகமாக வாங்கி வங்காளத்துக்கு அனுப்ப உத்தேசித்தார்கள். இதனால் உப்பளம் டிபார்ட்மெண்டின் கையிருப்பில் உள்ள உப்பு ரொம்ப குறைந்துபோகுமென்று தெரியவே, அந்தந்த ப்ரதேசத்திலுள்ள ஜனங்களுக்கு உப்பு சரிவரக் கிடைக்கும்படி கவர்ன்மெண்டாரே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடு என்னவென்றால், தினந்தோறும் சென்னையில் சில்லரையாக விற்கும் வ்யாபாரிகளுக்கு 2000 மணங்கு விற்பார்கள். இரண்டு மணங்கு கொண்ட ஒரு மூட்டை ரூ. 3-11-6 ஆக விற்கப்படும். இதை விற்பவர்கள் பட்டணம் படி ஒன்றுக்கு $1\frac{1}{2}$-அணாவுக்கு மேற்படாமல் விற்பதாக ஒப்புக்கொள்ள வேண்டும். கொஞ்சமாக உப்பு வேண்டியவர்களுக்கு சென்னை மூர் மார்க்கெட்டில் ஒரு ராத்தல் சுத்தம் செய்த உப்புப் பொட்டலம் $1\frac{1}{4}$-அணா விதம் விற்கப்படும்.

வெளியூர்களிலும் உப்பின் விலை அதிகமாகாமல் இருப்பதற்காக முனிஸிபல் சேர்மன்களுக்கு முனிஸிபாலிடிகளுக்கு பக்கத்திலுள்ள உப்பளத்திலிருந்து 2 மணங்கு உப்பு 3 ரூ. 12 அணா விதம் விற்கப்படும். அவர்களிடம் உப்பை வாங்கி விற்கும் சில்லரை வ்யாபாரிகளுக்கு க்ரமமான லாபத்துக்கு மேல் அதிக லாபம் ஏற்பட்டு விடாதபடி விற்க ஏற்பாடு செய்யவேண்டும். பம்பாயிலிருந்து உப்பு தருவிக்கும் உள்நாடுகளுக்கு உப்பு கிடைப்பதற்காக ஈரோடிலும் குண்டக்கல்லிலும் உள்ள டெபோக்களுக்கு உப்பு தனியாக அனுப்பப்படும்.

இந்த வர்ஷம் உப்பு அதிகம் சாகுபடி செய்வதற்காக 4800 ஏக்கர் நிலங்களில் உப்பு சாகுபடி செய்ய ப்ரைவேட் உப்பு சாகுபடிக்காரர்களைத் தூண்டி வருகிறார்கள். ஏற்கனவே 2000 ஏக்கர்களுக்கு வேண்டிய பேர்கள் கிடைத்திருக்கிறார்கள்.

**இந்தியன் நாஷனல் காங்க்ரஸ்.**

32-வது இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் சென்ற டிஸம்பர் மாஸத்தில் கல்கத்தாவில் நடைபெற்றது. மிஸஸ் அனிபெஸண்ட் அதன் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் இந்தியாவுக்கு ஸ்வய ஆட்சி வேண்டுமென்பதற்குத் தக்க காரணங்களையும், ஸ்வய ஆட்சி கொடுக்கக்கூடாதென்பதற்கு சிலர் சொல்லும் ஆக்ஷேபங்களுக்கு தக்க ஸமாதானங்களையும் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

**ஏன் ஸ்வய ஆட்சி வேண்டும்.**

இந்தியர்கள் ஸ்வய ஆட்சி வேண்டுமென்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றனவென்று மிஸஸ் பெஸண்ட் சொல்லுகிறார். முதலாவது ஸ்வயேச்சையென்பது ஒவ்வொரு தேசத்துக்கும் பிறப்புரிமையாகும். இரண்டாவது காரணமென்னவென்றால், இந்தியாவின் ஸம்மதமில்லாமலே அதன்



முக்யமான க்ஷேமலாபங்களை ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் க்ஷேமலாபங்களுக்குக் கீழ்ப்பட்டதாக வைத்திருப்பதும், இந்தியாவுக்கு முக்யமாய் வேண்டியிருப்பவைகளுக்காக அதன் ஆதார மூலங்களை உபயோகிக்காமலிருப்பதுமே. இதற்கு உதாரணமாக ஸ்தல பாதுகாப்புக்காக உபயோகப்படாமல் ஏகாபத்ய பாதுகாப்புக்காக உபயோகப்படும் ஸைன்யத்தின் செலவை, இந்தியாவில் ப்ரைமெரிக் கல்விக்காகச் செலவிடும் தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாய் தெரியவரும்.

தற்போதுள்ள ஆட்சி நல்லதா கெட்டதா என்பது கேள்வியல்ல. இங்கலண்டில் இங்க்லீஷார் ஆளும் திறமையைவிட ஜெர்மனியில் ஜெர்மானியர் அதிக திறமையாக ஆளுகிறார்கள். ஜெர்மானியர்களுக்கு நல்ல ஆகாரம் கிடைக்கிறது. அவர்களுக்கு ஸந்தோஷமாகக் காலங்கழிக்க அதிக ஸாதனங்கள் இருக்கின்றன. ஒழிவு நேரங்களும் அங்கே அதிகம். இங்கலண்டைவிட அங்கே தரித்ரம் ரொம்ப கடுமையாக இல்லை. இதனாலேயே எந்த இங்க்லீஷ்காரராவது ஜெர்மானியர்கள் இங்க்லண்டிலுள்ள உயர்ந்த உத்யோகங்களை யெல்லாம் அடையவேண்டுமென்று விரும்புவாரா? மாட்டார். ஏன்? ஏனென்றால் ஸ்வயேச்சையுள்ள மனிதர்களுக்கு இருக்கும் தன் மதிப்பும் கௌரவமும் அன்யர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயினும் அவர்களுடைய ஆதிக்யத்துக்கு இடங்கொடுக்காது. இதுதான் நாம் ஸ்வய ஆட்சி கேட்பதற்கு முக்ய காரணமாகும்.



மிஸஸ் அனிபெஸண்ட், கல்கத்தாவில்நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் 1917.

**தற்போதைய முறையில் குறைபாடுகள்.**

மற்ற காரணங்களை பின்வருமாறு ஸங்க்ரகமாகச் சொல்லிவிடலாம். "தற்போதைய ஆட்சி முறையானது ரொம்ப முக்யமில்லாத விஷயங்களிலும், ப்ரிட்டிஷ் உரிமைகள் ஸம்பந்தப்பட்ட விஷயங்களிலும் சரியாக இருக்கிறதென்றாலும், ஜனங்களுடைய ஸுகமும் ஸௌக்யமும் ஸம்பந்தப்பட்ட மற்ற முக்யமான விஷயங்களில் அது திறமையாக இல்லை. கல்வி அபிவ்ருத்தி, ஸுகாதாரம், வ்யவஸாய அபிவ்ருத்தி, ஸ்தல ஸ்வய ஆட்சி, சட்ட ஸபைகளில் இந்தியர்களுக்கு அதிக ஸ்வதந்த்ரம் கொடுத்தல், ஸர்க்கார் உத்யோகங்களில் இந்தியர்களை அதிகமாக நியமித்தல் ஆகிய இந்த விஷயங்களில் அதிகார வர்க்கத்தார் என்ன சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள்? ஒன்றுமில்லை. அதிகாரி வர்க்கத்தார் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ஒரு பெரும்தடையாக நிற்கிறார்கள். அவர்களுக்கு ஆகும் செலவைப்பார்த்தால் அவர்கள் செய்யும் வேலை ரொம்ப ஸ்வல்பமென்று சொல்லவேண்டும்.

# THE INDUSTRIAL DEVELOPMENT OF INDIA.

## இந்தியாவின் கைத்தொழில் அபிவ்ருத்தி.

சென்ற டிஸம்பர் மாஸம் கல்கத்தாவில் நடந்த கைத்தொழில் கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்த மிஸ்டர் வி. பி. மாதவ ராவ் தமது ப்ரஸங்கத்தில் இந்தியாவின் கைத்தொழிலபிவ்ருத்தி ஏற்படுவதற்கான மார்க்கங்களைப்பற்றிப் பேசினார். அவைகளில் சில வற்றை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

தேசத்தில் கைத்தொழில் அபிவ்ருத்தி ஏற்படவேண்டுமானால் முக்யமாக 6 விஷயங்கள் இருக்கவேண்டியது அவச்யம். அவையாவன:—(1) இயற்கை வஸதிகள். (2) மூலதனம். (3) ஸர்க்கார் உதவி. (4) விற்பனை வஸதிகள். (5) போக்குவரவு வஸதிகள். (6) தேர்ந்த வேலையாட்கள். ஆகிய இவைகளை இயற்கை வஸதிகள் விஷயத்தில் இந்தியா பாக்யமுள்ளதே. தேசமெங்கும் கைத்தொழில்களுக்கு உதவும் மூலப்பொருள்களும், இதரப்பொருள்களும் யதேஷ்டமாகக் கிடைக்கும். நமது தேசத்துக்கு வேண்டியவை மூலதனமும் இதர வஸதிகளுமே.



வி. பி. மாதவராவ்.

### கவர்ன்மெண்டின் கடமைகள்.

கைத்தொழிலபிவ்ருத்தி விஷயமாக கவர்ன்மெண்டார் செய்யவேண்டியவை யாதெனில்:--

(1) தேசம் முழுமையும் கைத்தொழில் ஸம்பந்தமாகவும், பூதத்வ சாஸ்த்ர ஸம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்து, அதன் பலன்களை அப்போதைக்கப்போது வெளியிடுவது.

(2) கைத்தொழில்களுக்குப் பண உதவியும் யுக்தியோசனை உதவியும் செய்துகொடுப்பது.

(3) அன்ய தேச வ்யாபாரிகளின் போட்டியைத் தடுப்பது.

(4) நாட்டில் பாங்கிகள் ஏற்படுத்துவதை ஆதரிப்பது.

(5) யாந்திரிக் கைத்தொழில்கள் ஸ்தாபித்து அவைகள் நன்ருக நடந்து வந்தால், ப்ரைவேட் கம்பெனிகளிடம் விட்டுவிடுவது. லாபகரமாக நடக்காவிட்டால் அவைகளை மூடிவிடுவது. எந்தக் காரணங்களைக் கொண்டும் யாந்திரிக் கைத்தொழில்களை எப்போதும் ஸர்க்காரே வைத்து நடத்தக் கூடாது.

(6) கவர்ன்மெண்டுக்குத் தேவையான ஸாமான்களை இந்தியாவிலேயே வாங்குவது. அந்தந்த ஸ்தலத்து கவர்ன்மெண்டார், அங்கே கிடைக்கும் பொருள்கள் சற்றுத் தாழ்ந்தனவாக இருந்தாலும், சற்று விலை ஏறி இருந்தா



லும் பாதகமில்லையென்று அவைகளையே வாங்குவது.

(7) கைத்தொழில் ம்யூஸியங்களும் சுற்றித்திரியும் லைப்ரரிகளும் (புஸ்தக சாலைகளும்) ஏற்படுத்துதல்; பெரிய சந்தைகளில் எக்ஸிபிஷன் (தொழில்காட்சி) ஏற்படுத்தி அங்கே கைத்தொழில் பொருள்களை பார்வையில் வைக்கவேண்டும். கைத்தொழில் முறைகளைச் செய்து காட்டவேண்டும்.

### ஜனங்களின் கடமைகள்.

கைத்தொழில் அபிவ்ருத்திக்கு ஸாதகமாக ஜனங்கள் செய்யவேண்டிய கடமைகளாவன:—

(1) உள்ளூரில் செய்த ஸாமான்கள் சற்று விலை அதிகமாயிருந்தாலும், சற்று மட்டமாயிருந்தாலும் பாதகமில்லை யென்று ஜனங்கள் அவைகளையே வாங்கி உபயோகித்தல்.

(2) முதலாளிகள், தொழில்களில் தேர்ந்த நிபுணர்கள் ஆகிய இவர்களுக்குள் ஒற்றுமை.

(3) வ்யாபாரத்தில் நாணயமிருக்கும்படி செய்வது.

(4) வட்டி நஷ்டமாகத் தூங்கும் பணத்தை வ்யாபாரம், கைத்தொழில்கள் ஆகிய இவைகளில் உபயோகித்தல்.

(5) மேற்சொன்னவிதமாக பொருளாதார விஷயங்களை கவனிக்கும்படி ஸ்வதேச ஸமஸ்தானங்களைத் தூண்டுதல்.

### குறைகள் ஏற்படாமல் பார்த்துக்கோள்வது.

ஸமீபத்தில் வெளியான 'ரௌண்ட் டேபிள்' என்னும் பத்ரிகையில் ஒரு நிருபர் இங்க்லண்டில் கைத்தொழில் ஏற்பாட்டில் உள்ள குறைகளை நன்ருக எடுத்துக் காட்டியிருக்கிறார். அவைகளை இந்தியர்கள் கவனிக்க வேண்டியது அவச்யமாகும். அவையாவன:—

(1) அமெரிக்கா போன்ற அபிவ்ருத்தியடைந்துவரும் நாடுகளில் தள்ளிவிடப்பட்ட பழைய யந்த்ரங்களையும் கைத்தொழில் ஸாதனங்களையும் ப்ரிட்டிஷார் உபயோகித்து வருகிறார்கள்.

(2) கைத்தொழில் விஷயமாக ஆராய்ச்சிகள் செய்யாததால் தொழில் சாலைக்காரர்கள் பழைய தொழில் முறைகளையே உபயோகிக்கிறார்கள். அதனால் தொழிலில் திறமை குறைந்துபோகிறது.

(3) இங்க்லண்டில் உள்ள தொழில்சாலைகள், பட்டரைகள், கப்பல் கட்டுமிடங்கள் ஆகிய இவைகள் சிறு அளவில் ஏற்பட்டிருக்கின்றன.

(4) தொழிலபிவ்ருத்திக்கு பணம் எடுத்து வைக்காமல் எல்லா லாபத்தையும் பங்கிட்டு எடுத்துக்கொள்வது.

(5) பொருள்கள் செய்வதிலும், அவைகளை விற்பதிலும் உயர்ந்த ஏற்பாடுகள் இல்லாமை. தற்காலம் அங்கே ஒரே பொருளைச் செய்யப் பல தொழில்சாலைகளும், கம்பெனிகளும் இருக்கின்றன. இவைகள் ஒன்று சேர்ந்து பெரிய கம்பெனிகளாக மாறினால் பொருள் செய்வதற்கும், அவைகள் விற்பதற்கும் அதிகச் செலவு ஏற்படாது.

(6) பாங்கிகளுக்கும் தொழில்காரர்களுக்கும் ஒற்றுமை கிடையாது.

(7) தொழில் சாஸ்த்ர ஆராய்ச்சியின் குணகுணங்களை நன்ருய் அறியாததனால், புது முறைகளையும் கொள்கைகளையும் உபயோகிக்க ப்ரிட்டிஷ் தொழிலாளிகளுக்கு விருப்பமிருப்பதில்லை.

### வரிபோடுவதற்கு ஸ்வய ஆட்சி வேண்டும்.

ஸ்வயேச்சையுள்ளதும் முன்னேற்ற மடைந்து வருவதுமான இங்க்லண்டிலேயே கைத்தொழிலின் நிலைமை இப்படி யிருக்கிறதென்

ருல், எத்தனையோ குறைகளுள்ள நமதுதேசத்தின் கைத்தொழில் நிலைமையைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் காப்பு வரியில்லாத வ்யாபாரத்தை கைக்கொண்டிருப்பதால், நமது தேசத்திலுள்ள சிறிய கைத்தொழில்கள்கூட பெருத்த அன்ய வ்யாபாரிகளுடன் போட்டி போட வேண்டி யிருக்கிறது. நமது தேசத்து சிற்றரசர்களும் முதலாளிகளும் ஏழை தொழிலாளிகளுக்கு வேண்டிய பண உதவி செய்ய முன் வருவதில்லை. இத்யாதி காரணங்களால் நமது நாட்டுத் தொழிலாளிகள் தங்கள் பூர்விகத் தொழில்களை விட்டுவிட்டு வ்யவஸாயத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாரம்பரையாக ஜனங்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கும் சில குணகுணங்களும் கைத்தொழில் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன. பொதுவாக படித்த வகுப்பார்கள் கைவேலை செய்யவேண்டியிருக்கும் தொழில்களிலும், இதர தொழில்களிலும் வ்யாபாரங்களிலும் விருப்பங் கொள்வதில்லை. இந்திய வேலைக்காரர்கள் வெகுவாய்த் திறமையற்றவர்களாகவும், கல்வி யறிவில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் நமது நாட்டிலாவது அன்யதேசங்களிலாவது தொழில் கல்வி கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்கு பண உதவி செய்ய பாங்கிக்காரர்களும், ஸங்கங்களும் கிடையா.

ஜப்பானில் கைத்தொழி லபிவ்ருத்திக்காக என்ன செய்கிறார்களென்றால், ஒவ்வொரு ஸ்தலத்திலும் எந்தக் கைத்தொழிலை ஸ்தாபிப்பது நல்லதென்று தெரிந்தெடுத்து, அந்தத் தொழிலில் தேர்ச்சியடையும்படி மாணவர்களை அன்ய தேசங்களுக்கு அனுப்புகிறார் ... வெளிதேசம் போன மாணவன் திரும்பி ...ம் வேலைக்காகத் திண்டாடவேண்டிய .... மாணவனுக்குப் படிக்கப் பணங் கொடுத்தவருக்கு, பண உதவி செய்ததற்கு பதிலாக ஒரு தொழில் நிபுணர் கிடைப்பார் என்ற தைர்யம் உண்டு.

இந்தியர்களுக்குப் பொறுப்புள்ள கவர்ன்மெண்ட் அதாவது ஸ்வய ஆட்சி கிடைத்தால் தான் அவர்களுக்கு வரிபோடுவதைப்பற்றிய கொள்கைகளை மாற்ற அதிகாரம் ஏற்படும். இந்தியாவுக்கு வரிபோடுவது, பணம் செலவழிப்பது ஆகிய இந்த விஷயங்களில் ஸ்வய ஆட்சி கிடைக்கும் வரையில், நாம் தேசத்துப் பொருள்களையே உபயோகித்து நாட்டுத்தொழில்களை வ்ருத்தி செய்ய முயலவேண்டும்.

---

‘பத்திரிகை’.

பத்திரிகை எனும் மொழி பானு-த்தன்னு-தினு-ரினு-கையன்னு எனும் ஐந்தெழுத்தாலாயது. அவ்வெழுத்துகளுள் சிலவற்றை நீக்கி, சிலவற்றைச் சேர்த்தால் பலபொருளையுந் தரும் பல மொழிகளாகின்றன.

முதலாம் இரண்டாம் மூன்றும் எழுத்துக்களைச் சேர்த்தால் பத்தி எனவந்து வழிபாடு என்னும் பொருளைத் தரும்.

முதலாம் மூன்றும் எழுத்துகளைச்சேர்த்தால் பதி எனவந்து கடவுள் என்னும் பொருளைத்தரும்.

முதலாம் நாலாம் எழுத்துகளைச்சேர்த்தால் பரி எனவந்து குதிரையென்னும் பொருளைத்தரும்.

முதலாம் ஐந்தாம் எழுத்துகளைச்சேர்த்தால் பகை எனவந்து விரோதம் என்னும் பொருளைத்தரும்.

மூன்றும் நாலாம் எழுத்துகளைச் சேர்த்தால் திரி எனவந்து விளக்குத்திரி எனும் பொருளைத்தரும்.

மூன்றும் நாலாம் ஐந்தாம் எழுத்துகளைச் சேர்த்தால் திரிகை எனவந்து திரிகை யந்த்ரம் என்னும் பொருளைத் தரும்.

முதலாம் நாலாம் ஐந்தாம் எழுத்துகளைச் சேர்த்தால் பரிகை எனவந்து அகழ் என்னும் பொருளைத் தரும்.

மூன்றும் ஐந்தாம் எழுத்துகளைச்சேர்த்தால் திகை எனவந்து திக்கு என்னும் பொருளைத்தரும்.

ஐந்தாம் எழுத்து கை எனவந்து கரம் என்னும் பொருளைத் தரும்.

இவ்வாறு பத்திரிகை எனும் மொழி பல சொற்களுக்கும் பலபொருள்களுக்கும் இடமாயிருப்பது போல, பத்திரிகை எனப்படுகின்ற பத்ரமும் வேறுபட்ட நானு ஸங்கதிகளுக்கும் ஏற்றதாகிறது.

—சத்தியவேத பாது காவலன்.



# THE CULTIVATION OF THE ORANGE.

## கிச்சிலி சாகுபடி.

கிச்சிலியானது உஷ்ண ப்ரதேசங்களிலும் சற்று உஷ்ணங் குறைந்த ப்ரதேசங்களிலும் ஏராளமாகப் பயிராகக்கூடிய ஒரு மரம். இதன் பழம் ஸம சீதோஷ்ண ப்ரதேசங்களிலுள்ளவர்களுக்கு ரொம்ப ப்ரியமாயிருப்பதால், கிச்சிலி வ்யாபாரம் ரொம்பவும் வ்ருத்தியாகி வருகிறது. ஐரோப்பாவுக்கு ஏராளமாக இந்தப் பழம் ஏற்றுமதியாகி வருகிறது. முன்பு வட ஆப்ரிக்காவிலும், மத்யதரைக் கடலை யொட்டியுள்ள ப்ரதேசங்களிலும் இது விசேஷமாகப் பயிரிடப்பட்டு, இதன் பழம் ஐரோப்பிய தேசங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதியாகி வந்தது. முன்பு கப்பல் போக்குவரவு ரொம்ப தாமஸமாக இருந்ததால் தூர தேசங்களிலிருந்து வருவது அரிதாயிருந்தது. சென்ற பல வர்ஷங்களாக புகைக் கப்பல்கள் அதிகரித்து அதனால் துரிதமான கப்பல் போக்குவரவு ஏற்படவே, ரொம்ப தூரத்திலுள்ள மேற்கு இந்திய தீவுகளிலிருந்துங்கூட ஏராளமான பழங்கள் ஐரோப்பாவுக்கு வருகின்றன.

### நிலம்.

கிச்சிலி மரம் மணல் நிலமல்லாத வேறு எந்த நிலத்திலும் வளரக்கூடியது. நிலமானது திறந்த வெளியாயும், உயர்ந்தும், வடிகால் உள்ளதாயுமிருக்க வேண்டும். கிச்சிலியின் வேர் அதிக ஆழம் போகுமாதலால் ரொம்ப ஆழம் வரையில் மண் புலபுலப்பாயிருக்க வேண்டும். எல்லா வகை நிலங்களிலும் வளருமென்றாலும், இந்த்ரிய வஸ்துக்கள் அதிகமாயுள்ள உயர்ந்த நிலத்தில்தான் அதிக பழங்கள் கிடைக்கும்.

### சீதோஷ்ண நிலைமை.

ரொம்ப உஷ்ணமான ப்ரதேசங்களில்தான் கிச்சிலி நன்றாய்ச் செழித்து வளருகிறது. உறை பனி பெய்யுமிடங்களில் பயிராகுமென்றாலும் அவ்வளவு பலன் கொடுப்பதில்லை. ஸமுத்ர மட்டத்துக்கு மேல் 2000 அடி வரையில் உயரமுள்ள ப்ரதேசங்களிலெல்லாம் இது பயிராகும். இதற்கு நிழல் வேண்டியதில்லை. நல்ல வெயில்தான் இதற்கு வேண்டியது. காற்றினால் மரத்துக்கு யாதொரு கெடுதலுமில்லை யென்றாலும், பூக்கள் உதிர்ந்து போய் மாஸூலைக் குறைக்குமாகையால் காற்றடைப்பு மாத்ரம் வேண்டியது அவச்யம். கூடுமானால் காற்றடைப்பான வேலிகள் போடுவது நல்லது.

### வ்ருத்தி செய்தல்.

கன்றுகள் உண்டாகி நல்ல பலன் கொடுப்பதற்கு சிலர் ஒட்டுக் கட்டவேண்டுமென்கிறார்கள். வேறு சிலர் ஒட்டுகட்டாமலே பயிரிட்டால் போதுமென்கிறார்கள். ஒட்டுக் கட்டாமல் பயிரிடும் வழக்கம் மேற்கு இந்திய தீவுகளில் அதிகம். ஒட்டுக்கட்டாமலே அங்கே மரங்களில் உயர்ந்த பழங்கள் கிடைக்கின்றனவாம். ஐரோப்பாவில் ஒட்டுக்கட்டியே மரங்களை வ்ருத்தி செய்கிறார்கள். அங்கே ஒட்டிக்கட்டின மரங்களில்தான் உயர்ந்த பழங்கள் கிடைக்கின்றன. ஆனால் நமது நாட்டு நிபுணர் ஒருவர் ஒட்டுக் கன்றுகளைவிட ஸாதாரணக் கன்றுகள் அதிக காலம் ஜீவித்திருப்பதோடு, அதிகமாகவும் காய்க்கின்றனவென்றும், ஆனால் ஒட்டுக் கன்றுகள் சீக்ரம் பலன் கொடுக்க ஆரம்பிக்கின்றன வென்றும் சொல்லுகிறார்.

விதை விதைத்துப் பயிரிடவேண்டுமானால், விதைகளை புதிதாகப் பார்த்து (இது முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயம்.) எடுத்து அதிக ஆழம் வெட்டி நன்றாய்ப் பண்படுத்தியுள்ள நாற்றங்கால்களில் நடவேண்டும். இ

தச்செடியின் ஆணிவேர் அதிக ஆழம் போகுமாதலால், நிலத்தை அதிக ஆழம் வெட்டிவிடவேண்டியது அவச்யம். விதைகள் சீக்ரம் முளைத்துவிடும். கன்றுகள் ஒரு வருஷமானதும், அவைகளைப் பெயர்த்து நிரந்தரமான இடங்களில் நட்டு விடலாம்.

நடுதல்.

எவ்வளவு தூரத்துக்கு ஒன்றாகச் செடிகளை நடவேண்டுமென்பது நிலத்தின் தன்மையைப் பொருத்தது. மண் வளப்பமாயும், அடிமண் அதிக ஆழம் வரையில் புலபுலத்தும் இருந்தால், 25 அடி தூரத்துக்கு ஒன்றாக நடுவது நல்லது. மட்டமான நிலங்களில் 15 அடி முதல் 20 அடி தூரம் வரையில் ஒன்றாக நடலாம். கன்றுகளை நடுவதற்கு 3 அடி அகலம், 3 அடி நீளம், 4 அடி ஆழமுள்ள குழிகள் வெட்டவேண்டும். மழை ஆரம்பிக்குமுன் இதில் எருவும், கூடுமானால் உடைத்த எலும்பும் கலந்த உயர்ந்த மண்ணைப் போட்டு மூடிவிடவேண்டும். மழைகாலக் கடைசியில் குழியில் சிறு பள்ளம் உண்டாக்கி அதில் கன்றுகளை நட்டுவிட வேண்டும். மழைபெய்யாவிட்டால் வாரத்துக்கு இரண்டு தடவை ஜலம் பாய்ச்சவேண்டும். பனிக்காலத்தில் 9 அல்லது 12 நாளுக்கு ஒரு முறை ஜலம் பாய்ச்சலாம். அடுத்துவரும் கோடைகாலத்தில் 4 நாளுக்கு ஒருதடவை ஜலம் பாய்ச்சுவது நல்லது. அடிக்கடி கன்றுகளைச் சுற்றிலும் உள்ள மண்ணைக் கிளறி விடவேண்டும்.

எருவிடுதல்.

எரு எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் போடுகிறோமோ அவ்வளவுக்கு கிச்சிலி நல்ல பலன்கொடுக்கும். வளப்பமில்லாத நிலங்களில் மரமானது செழிப்பாய் இராது. அதன் இலைகள் மஞ்சள் சாயலாக இருக்கும். மாஸூலும் கம்மி. மரத்துக்கு நைட்ரோஜின் ஸம்பந்தமான எருப்போட்டால், அது நன்றாக வளருவதோடு, நல்ல பலனும் கொடுக்கும். ஒவ்வொரு வர்ஷமும் அதற்கு எருவிடவேண்டியது அவச்யம். பக்ஷிகளின் மலமும் மரச்சாம்பலும் கிச்சிலிக்கு நல்ல எருவாகும். மண்ணில் சுண்ணாம்பு இருந்தால்தான் கிச்சிலி நல்ல பலன் கொடுக்கும். சுண்ணாம்பு இல்லாத நிலங்களில் ஒரு ஏக்கருக்கு ½ டன் விதம் அதைப் போடுவது நல்லது.

இடைப் பயிர் சாகுபடி.

மரங்களுக்கு இடையில் உள்ள பூமியில் வேறு பயிர்களைச் சாகுபடி செய்வதைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்ராயப் படுகிறார்கள். கிச்சிலி சாகுபடி ப்ரபலமாயுள்ள மேற்கு இந்தியத் தீவுகளில் இடைப் பயிர் சாகுபடி செய்வதுதான் வழக்கம். பொதுவாய்ச் சொல்லுமிடத்து இதர பயிர்கள் சாகுபடி செய்வதால் ஏற்படும் எரு நஷ்டத்திற்கு ஈடு செய்யத்தகுந்த எருவிட்டுவந்தால், இடைப்பயிர் சாகுபடியால் கெடுதலொன்றுமில்லை. வேண்டிய அளவு எருப்போடாவிட்டால், இதர பயிர்கள் நிலத்திலுள்ள ஸத்தை க்ரகித்துக்கொண்டு கிச்சிலி மரங்களுக்கு எருவில்லாமல்போய் மாஸூல் குறைந்துவிடும்.

---

ஸாரின் ஆஸ்தி.

ரஷ்யாவில் ராஜாங்கப் புரட்சி ஏற்பட்டவுடன் ரஷ்ய அரசுக்குள்ள ஸொத்துக்களையெல்லாம் குடியரசு கவர்ன்மெண்டார்பறிமுதல் செய்துவிட்டார்கள். நிக்கலாஸ் அரசருக்கு அரசர் என்ற நிலைமையில் ஸொந்தமானவைபோக, இதர ஸொந்த ஸொத்துக்கள் கொஞ்சந்தானிருக்கின்றன. அவருக்கு ரொக்கமாகவும் பத்ரங்களாகவும் 15 லக்ஷம் ரூபாய் தானிருக்கின்றன. அவருடைய மனைவிக்கு 16½ லக்ஷம் ரூபாய் ஸொத்திருக்கிறது. அவரது புத்ரர் தமது பெற்றோர்களைவிட அதிக பணக்காரர். அவருக்கு இதுவரை கொடுக்கப்பட்டுவந்த அல்லவன்ஸ் செலவழியாமல் சேர்ந்துவந்ததால், இவ்விதம் அதிகமாயிற்று. அவருக்குள்ள ஸொத்தின் மதிப்பு 82½ லக்ஷம் ரூபாயாகும்.

ஸாருடைய புத்ரிகள் நால்வருக்கும் அதிக ஸொத்துக்கள் இருக்கின்றன. ஆல்கா என்பவளுக்கு 79½ லக்ஷம் ரூ. டாட்டியானா என்பவளுக்கு 60 லக்ஷம்; மேரி என்பவளுக்கு 55½ லக்ஷம்; அனஸ்டாஸியா என்பவளுக்கு 49½ லக்ஷம் ரூபாய்.



## THE HOARDED WEALTH OF INDIA.

## இந்தியாவில் உபயோகிக்காமல் சேர்த்து வைத்திருக்கும் தனம்.

சென்ற 2000-வர்ஷங்களாக இந்தியாவிலிருந்து சரக்குகளை வாங்கிப்போகும் மேல்நாட்டார் அவைகளுக்காகத் தங்கமும், தங்க நாணயங்களும், வெள்ளியும், வெள்ளி நாணயங்களும் கொடுக்கவேண்டி யிருந்தது. மேல்நாட்டுச் சரக்குகளுக்கு இந்தியாவில் அதிக க்ராக்கியில்லாததால் ஏற்றுமதியின் க்ரயத்தைவிட இறக்குமதியின் கிரயம் குறைவாக இருக்கிறது. இதனால் அதிகப்படியான ஏற்றுமதிக்கு மேல்நாட்டார் நாணயங்களையும், அவைகள் செய்ய உதவும் உலோகங்களையும் கொடுக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் வர்ஷந்தோறும் ஏராளமான தங்கமும் வெள்ளியும் இந்தியாவுக்கு வரலாயின. இப்படி சென்ற இரண்டாயிரம் வர்ஷங்களாக வந்துகொண்டிருப்பதால், இந்தியாவிற்கு வந்திருக்கும் மொத்தம் தங்கமும் வெள்ளியும் ஏராளமாயிருக்குமென்று சொல்லலாம். இவைகளை ஜனங்கள் புதைத்துவைத்தும், பூட்டிவைத்தும், நகை முதலியவைகள் செய்தும் வந்திருக்கிறார்களென்றும், தற்காலம் தேசத்தில் பந்தோபஸ்து அதிகமாகி கைத்தொழில் வ்யாபாரம் முதலியவை செய்வதற்கு வஸதிகளிருந்தும், அவைகளில் அதிகமாக பணம் போட எவரும் முன்வராததால், பண்டைக்காலத்தில் பணத்தைப் பத்ரப்படுத்தி வந்த வழக்கம் இன்னும் போகாமலிருக்கிறதென்றும், அந்தப் பணத்தை எடுத்து கைத்தொழில்களிலும், வ்யாபாரங்களிலும் போடும்படி ஜனங்களைத் தூண்டவேண்டுமென்றும், சில பொருளாதார வித்பன்னர்கள் முறையிட்டு வருகிறார்கள். ஆனால் இந்திய தேசாபிமானிகளில் பலர் ஜனங்கள் பரம ஏழைகளென்றும், அவர்களிடம் முன் சொன்னபடி சேர்த்துவைத்த தனம் ஒன்றுமில்லையென்றும் சொல்லி வருகிறார்கள்,

ஸமீபத்தில் மிஸ்டர் எ. வி. சட்டர்ஜி என்பவர் ஒரு பத்ரிகையில், இந்தியாவில் சேர்த்து மறைத்து வைத்துள்ள பணம் ஏராளமாயிருக்கிறதென்பது உண்மையல்லவென்பதற்கு சில காரணங்கள் தெரிவித்திருக்கிறார்.

உலோகங்களை மறுபடியும் ஏற்றுமதி செய்வது.

இதுவரையில் யாவரும் கடல் வ்யாபாரத்தைப்பற்றியே கவனித்து, அதைக்கொண்டு இவ்விஷயத்தில் அபிப்ராயங்கள் தெரிவித்து வருகிறார்கள். இந்தியாவுக்கும் சீனா, ஜப்பான் முதலிய கீழ் தேசங்களுக்கும் தரை மூலமாக நடக்கும் வ்யாபாரத்தை எவரும் கவனிக்கவில்லை. சீனா, ஜப்பான் தேசங்களிலிருந்து பட்டு, கிழக்கு இந்திய தீவிகளிலிருந்து லவங்கம் முதலிய வாஸனைப் பொருள்கள், திபேத்து முதலிய இடங்களிலிருந்து தாதுப்பொருள்கள், குதிரைகள், மாடுகள், கம்பளி முதலியவைகளை இந்தியர்கள் வரவழைத்து வருவதுண்டு. இந்த தேசங்களுக்கு இந்தியாவிலிருந்து போகக்கூடிய ஸாமான்கள் அதிகமில்லை. ஆகவே இந்த தேசங்களிலிருந்து ஸாமான்கள் தருவித்தால், பதில் ஸாமான்கள் கொடுப்பதற்கில்லாமல், தங்கம் வெள்ளி ஆகிய இவைகளையே கடல் மூலமாகவோ தரை மூலமாகவோ அனுப்பவேண்டியிருக்கிறது. மேல் நாடுகளிலிருந்து வரும் தங்கம் வெள்ளி நாணயங்களில் ஒரு பெரும்பாகம் இவ்விதம் கீழ் நாடுகளுக்குப் போயிருக்கிறதென்று சொல்லலாம். இந்த வழக்கம் வெகு காலமாக நடந்துகொண்டே வந்திருக்கிறது. தரை வ்யாபாரம் ரொம்ப குறைவாயுள்ள இக்காலத்திலுங்கூட இவ்வழக்கம் நடந்துகொண்டுதானிருக்கிறது.

சேதாரம்.

மற்ற தேசங்களில் போலவே நமது தேசத்

திலும் தங்கம் வெள்ளி இவைகளை அடிக்கடி உருக்குவதில் சேதாரம் ஏற்பட்டு மொத்த நிறையில் குறைவு ஏற்படுகிறது. தங்கம் வெள்ளி ஆகிய இவைகளால் நகை செய்யும்போது சேதாரம் ஏற்படுவது யாவருக்கும் தெரிந்ததே. காசி, அகமதாபாத், டெல்லி, லக்னௌ முதலிய இடங்களில் வெள்ளி தங்கம் இவைகளைக்கொண்டு சித்ரக் கைத்தொழில்கள் விசேஷமாக நடக்கின்றன. இப்பொழுதே அதிகமென்றால், பூர்வ காலத்தில் அவைகள் ரொம்ப மும்முரமாய் நடந்து வந்திருக்கும். நகைகள் போட்டுக்கொள்வதில் ஜனங்களுடைய விருப்பம் அடிக்கடி மாறிவருவதால், அவர்கள் அடிக்கடி தங்கள் நகைகளை அழித்து வேறு நகைகளாகச் செய்கிறார்கள். இவ்விதமெல்லாம் செய்வதில் தங்கமும் வெள்ளியும் ரொம்பவும் சேதமாகின்றன. மொத்தத்தில் பார்த்தால் சேதமான உலோகங்கள் ரொம்ப அதிகமாக இருக்கும். சேதத்தையும், மறு ஏற்றுமதியையும் கழித்துப் பார்த்தால் நமது தேசத்தில் தங்கியுள்ள தங்கமும் வெள்ளியும் அதிகமாக இல்லையென்று தெரியவரும்.

க்ராமத்து ஸ்த்ரீகள் ஏராளமான நகைகள் போட்டிருப்பதைப் பார்த்து, சிலர் அவ்வளவு நகைகளும் தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்டவை என்றெண்ணுகிறார்கள். க்ராமாந்த்ரத்து ஸ்த்ரீகள் போட்டுக்கொள்ளும் நகைகளில் ஸ்வல்பந்தான் உயர்ந்தவை. மற்றவையெல்லாம் பெரும்பாலும் கண்ணாடி வளையல்களும் அரக்கு வளையல்களும் வேறு தாழ்ந்த உலோகங்களால் செய்த நகைகளுமே. மேலெழுந்த பார்வையாய்ப் பார்க்கும் தேச ஸஞ்சாரிகள் இதன் உண்மையை அறியாமல், இந்திய ஸ்த்ரீகள் எல்லாரும் உயர்ந்த நகைகள் அதிகம் போட்டுக்கொண்டிருப்பதாக எண்ணுகிறார்கள்.

நிலம் வாங்குதல்.

ப்ரிட்டிஷ் அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் சேர்த்து வைத்த தனம் ஏதாவது இருந்திருந்தாலுங்கூட, தற்காலம் விவஸாயிகளுள் நில ஆசை அதிகமாயிருப்பதால், நிலம் வாங்க அவை உபயோகப்பட்டு வெளிவந்திருக்கும்.

பஞ்சங்களுக்குப் பிறகு பணம் வெளிப்படுதல்.

சேர்த்து வைத்துள்ள பணம் அதிகமாயிருக்குமென்றால், பஞ்சகாலத்தில் ஜனங்கள் அதை தங்கள் ஸம்ரக்ஷணைக்கு எடுத்து உபயோகிப்பது ஸகஜம். ஆனால் பஞ்சம் நேர்ந்த காலத்தில் ஜில்லாக்களில் நன்றாய் கவனித்துப் பார்த்ததில் இப்படி நடந்ததாகத் தெரியவில்லை. நாணய டிபார்ட்டுமெண்டின் கணக்குகளிலிருந்து இவ்விதம் நேர்ந்ததாகவும் தெரியவில்லை,

மேலும் நமது தேசத்தில் ஜனங்களுடைய வாழ்க்கை நிலைமை யாவருக்கும் தெரியக் கூடியதாகவே இருக்கிறது. யாரிடமாவது அதிகமான பணம் ரொக்கமாக இருக்கிறதென்றால் அவ்விஷயம் ஊரெல்லாம் தெரிந்திருக்கும். ஏதோ சில பேர்களிடந்தான் இவ்விதம் பணம் ரொக்கமாக இருக்கிறதாகத் தெரிகிறது.

கோவாபரேஷனும் பணம் சேர்த்து வைத்தலும்.

கோவாபரெடிவ் ஸங்கங்களின் [illegible] தைக்கொண்டு பார்த்தால், ஏராளமான [illegible] தேசத்தில் தூங்கிக் கிடக்கிறதென்று [illegible] வதற்கு தக்க ஆதாரம் கிடைத்திருக்கிறதாகத் தெரியவில்லை. க்ராம ஸங்கங்களுக்கு சொந்தமாகச் சேர்ந்திருக்கும் மூலதனமெல்லாம் அநேகமாய் ஏற்பட்டபிறகு ஜனங்கள் தங்கள் வரும்படியிலிருந்து மிச்சம் பிடித்து ஸங்கத்தில்போட்ட பணமேயாகும். ஒரு சிறு பாகந்தான் சேர்த்து வைத்திருந்த பணமாகும். அநேகம் பேர்கள் ஆபத்துக் காலங்களுக்கு



வேண்டுமென்று கொஞ்சம் பணம் வீட்டில் சேர்த்து வைத்துக்கொள்வது உண்மைதான். ஆனால் ஜாக்ரதையாகக் கணக்குப் போட்டதில், அப்படிச் சேர்த்து வைத்திருக்கும் பணம்மொத்த ஜனத்தொகையில் தலைக்கு 10-ரூபாய்க்குமேல் போகாதென்று தெரிகிறது. தலைக்கு 5 ரூபாயென்பது அநேகமாகசரியாயிருக்கலாம். இதன்படி பார்த்தால் நமது தேசம் முழுமைக்கும் 150 கோடி ரூபாய்தானாகும்.

முடிவுரை.

ஆகவே, இப்படி மேற்சொன்ன விஷயங்களையெல்லாம் யோசித்துப் பார்க்குமிடத்தில், ஜனங்கள் கையில் ஏதோ ஏராளமான பணம் வீணாகத் தூங்கிக் கிடக்கிறதென்று சொல்லுவதற்கு தகுந்த காரணங்கள் இல்லையென்பது வெளிப்படையாகிறது.

---

# THE LOST JEWEL.

## நகை அழிந்த விதம்.

BY S. NARASIMHACHARI, B.A., B.L.

இடையன் கெடுத்தது பாதி;
மடையன் கெடுத்தது பாதி.

இந்த பூமண்டலத்திலுள்ள நூற்றுக் கணக்கான தேசங்களில் உள்ளவர்களுடைய குணாதிசயங்களை ஆராய்ந்து பார்ப்போமாகில், எல்லாத் தேசங்களிலுமுள்ள ஸகல ஸ்த்ரீகளும் ஒரு பொதுக் குணமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதைக் கண்டறியலாம். ஐரோப்பிய ஸ்த்ரீகளாயினும் சரி, ஆப்ரிக்கா கண்டத்து ஸ்த்ரீகளாயினும் சரி, மஹம்மதிய ஸ்த்ரீகளாயினும் சரி, இந்திய ஸ்த்ரீகளாயினும் சரி, வேறு எந்த ஜாதி ஸ்த்ரீகளாயினும் சரி, அவர்கள் அனைவருக்கும் ஒரு பொதுக் குணமுண்டு. இந்தக் குணமில்லாத ஸ்த்ரீயை இதுவரையிலும் கண்டிருப்பதாக எந்த நூலாசிரியரும் எழுதினதில்லை.

இந்தப் பொதுக்குணம் எது? "சேலை, நகை என்னும் இவ்விரு வஸ்துக்களிலும் ஒரு விதமான பைத்யம்."

'சேலையிலும், நகையிலும் ஒரு விதமான பைத்யம்' என்று சொன்ன மாத்ரத்திலேயே, 'ச்சே! இதுதானா! இந்தப் பைத்யம் புருஷர்க்கும் உண்டே! ஸ்த்ரீகளுக்கு மாத்ரம் உள்ள குணமென்று எப்படிச் சொல்லலாம்' என்று கேட்கலாம். இதற்கு பதில் என்னவென்றால், 'ஒரு விதமான' என்ற வார்த்தையைத் தடித்த எழுத்தில் அச்சிட்டிருக்கிறதே அந்தத்தடித்த எழுத்தினால் குறிக்கப்பட்ட அரிய பெரிய விஷயந்தான்.

நகையிலும் உடையிலும் பைத்யம் கொள்வது புருஷரிடத்திலும் இருக்கிறதென்பது நிஜமே. ஆயினும் இந்த விஷயத்தில் புருஷரையும் ஸ்த்ரீகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், புருஷர்க்குள்ள பைத்யத்தைக் காட்டிலும், ஸ்த்ரீகளுக்குப் பதினாயிரம் பங்கு அதிக பைத்யமிருக்கிறதென்று தெரியவரும்.

ஒரு சிறிய உதாரணம்:—1703-ம் நம்பர் மல் இப்போது ஜகப்ரஸித்தமாயிருக்கிறதல்லவா. ரிக்ஷா வண்டி இழுப்பவனும், ஜட்கா வண்டி ஓட்டுகிறவனும், மூட்டை தூக்கும் போர்ட்டருங்கூட '703-ம் நம்பர் மல்லைக் கட்டுகிறார்கள். அது இருக்கட்டும். இந்த மல் துணியைப் பெரும்பாலும் கட்டுகிறவர்கள் உத்யோகஸ்தர்களே. அவர்களில் அநேகர், இந்த ஒருவகை வஸ்த்ரத்தை உடுத்தியே, தமது ஆயுள் முழுவதையும் கழித்துவிடுகிறார்கள். ஆனால் ஸ்த்ரீகளோ, உடை விஷயத்தில் மிகுந்த ஸமர்த்தர்கள். அவர்களு

டைய தர்ம சாஸ்த்ரத்தில், உடுத்துக்கொள்ளும் சேலைகளைப்பற்றிய அத்யாயத்தில் எழுதியுள்ள முதல் நீதி வாக்யம் என்னவென்றால், ‘தலை போகிறதாக இருந்தாலும் ஒருதரம் வாங்கிக் கட்டின தினுஸை, மறுபடியும் வாங்கி உடுத்தக்கூடாது,’ என்னும் ஏற்பாடே. இந்தக் காரணம் பற்றியே போலும் ஸ்த்ரீகள் உடுக்கும் புடவைகள் ஆயிரக் கணக்கான பெயர்கள் பெற்றிருக்கின்றன.—‘தண்டவாளம்,’ ‘வண்டவாளம்,’ ‘ரயில் கட்டடம்,’ ‘ஜெயில் கட்டடம்,’ ‘தாழம்பூக்கறை,’ ‘வாழைப்பூக்கறை,’ ‘காயும் பழம்,’ ‘பேயம் பழம்,’ ‘பாலாமணி கறுப்பு,’ ‘ராஜாமணி சிகப்பு,’ ‘பெங்களூர் தலைப்பு,’ ‘தர்மாவரம் கலைப்பு,’ ‘யானை பப்பிளி, கொப்புளி,’ ‘ஸட்ஜா தாட்பத்ரி, ஜனரல் ஆஸ்பத்ரி,’ ‘ஆரணி அரக்கு, பேரணி முறுக்கு,’ என்றிப்படி ஆயிரக் கணக்காகப் பெயர்கள் தோன்றியிருக்கின்றன. இப்பெயர்கள் எல்லாவற்றையும் திரட்டி எழுத ஆரம்பித்தால், இவைகளுக்கென்றே ப்ரத்யேகமாகப் பேரகராதிகள் இரண்டு வேண்டியிருக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. இவ்விதமான அகராதி எழுதுவது, முற்றும் அஸாத்யமான காரியம்; ஒருகால் ஸ்த்ரீகளே சேர்ந்தெழுதினாலும் முடியுமோ, என்பதும், கொஞ்சம் ஸந்தேகமே.

சேலையின் மகிமை இப்படிப்பட்டது, இதைக்காட்டிலும் சிறந்தது, நகையினுடைய மகிமை.

கட்டிக்கட்டி சேலை கிழிந்துபோய் விடுகிறபடியால், ஆறு மாஸத்துக் கொருமுறை புதுப் புடவை வாங்குவது ஸுலபமான காரியமாக இருக்கிறது. ஆனால், ஆறு மாஸத்துக் கொருமுறை ஒரு புதுநகை வாங்குவதென்றால், அது பலர்க்கும் மிகவும் கஷ்டமான விஷயமல்லவா? இதற்குத் தகுந்த உபாயம் கண்டுபிடித்திருக்கிறார்கள், நமது ஸ்திரீகள். ஆஹா! அவர்களுடைய ஸாமர்த்யந்தான் எவ்வளவு ஆச்சரியகரமானது!

மாஸம் 25 ரூபாய் சம்பளம் பெறும் ஏழைக் குமாஸ்தாவினுடைய மனைவியுங்கூட, இந்த விஷயத்தில் தன் கௌரவத்தைக் குறைத்துக் கொள்வதில்லை. அவளும் ஆறுமாஸத்துக் கொருமுறை புது நகை போட்டுக் கொள்ளுகிறாள். அது எப்படி? 25 ரூபாய் சம்பளம் உள்ளவன் மனைவிக்குப் புது நகை வருவதெப்படி?

இந்த விஷயத்தில் நமது ஸ்த்ரீகள் செய்யும் தந்த்ரம் மிகவும் ஸூக்ஷ்மமானது. கல்யாண காலங்களில் பெண்ணுக்கு நகை போடுவது எல்லாஜாதியார்களிலும் ஸாதாரணமான வழக்கமல்லவா? அந்த நகைகளில், ‘கைக்காப்பு’ என்னும் பெயர் கொண்ட ஸாதாரண நகை யிருக்கிறதே, அதொன்றையே, நாம் கவனித்தால் போதுமானது. நமது குமாஸ்தா மனைவி முதல் முதலில் ஆறு ஸவரன் தங்கமுள்ள காப்பொன்றைச் செய்து போட்டுக் கொண்டதாக வைத்துக்கொள்வோம். எட்டு மாஸங்களாகின்றன. பக்கத்துவீட்டிலிருக்கும் ஒருத்தி, சற்றே மெல்லியதான காப்புப் போட்டிருப்பதை இவள் காண்கிறாள். உடனே இந்த அம்மாள் மனது மாறுபாடடைகிறது. தன் கைக்காப்பு உலக்கைபோலத் தடியாயிருக்கிறதென்றும், அதைக் கையில் தரித்துக்கொள்வது மிகுந்த அநாகரீகமென்றும், மெல்லிய காப்பே கௌரவமுள்ளதென்றும் எண்ணி, தனது காப்பை அழித்து, மெல்லியதாக்க வேண்டுமென்று தீர்மானித்து, தனது புருஷனை இரவும் பகலும் பூட்டுப் மூச்சிபோலத் துளைக்க ஆரம்பித்தாள். 25 ரூபாய் சம்பளம், குடிக்கூலிக்கும், ஜட்கா வண்டிச் சத்தத்துக்கும், காபி ஹோட்டல் செலவுக்குமே, போதாமல் தவிக்கிற ஏழை குமாஸ்தா என்ன செய்வான், பாவம்! ‘கூடாது,’ என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிடுகிறான். இந்தப் பிடிவாதத்துக்கு அஞ்சினவளா, அவன் மனைவி. அப்போது அவள் ஒரு யுக்தி சொல்லித் தருகிறாள். “இப்போது, ரூபாய்க்கு என்ன செய்கிறதென்று நீங்கள் கொஞ்சமும் கவலைப் படவேண்டாம். இந்தக் காப்பு ஆறு ஸவரன் கொண்டு செய்ததல்லவா? அந்த ஆறு ஸவரனில் இப்போது ஏறக்குறைய அரை ஸவரன் தேய்ந்திருக்கலாம். இதை உருக்கி மறுபடியும் காப்பு செய்வதற்கு ஸுமார் 5 ரூபாய் கூலியாகும். சேதாரம் 2 ரூபாய் போகட்டும். போக, மீதி 5 ஸவரன் தங்கம் இருக்கிறது. அதுபோதும் மெல்லியதான காப்புக்கு. நீங்கள் ஏன் இதற்கென்று வீணாக விசாரப்படவேண்டும்?’ என்று யுக்தி சொல்லுகிறாள்.



பகலிலோ, ஆபீஸில் இடுப்பொடிய வேலை; இரவிலோ, வீட்டில் மனைவி, ‘காப்பு, காப்பு’ என்று ஜாப்பணம் போட்டுத் துளைக்கிறாள். அந்த ஏழைக் குமாஸ்தா என்ன செய்வான்? ‘எப்படியாவது தொலைந்துபோ. இதைப் பற்றி என்னிடம் மறுபடியும் சொல்லாதே. உன்னிஷ்டப்படி செய்துகொள்.’ என்று சொல்லி விடுகிறான்.

ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்குள் மெல்லிய காப்பு கைக்கு வந்து சேர்ந்து விடுகிறது. அம்மாளுக்கு இருக்கிற மகிழ்ச்சிக்குக் கங்கு கரையில்லை.

* * * *

இன்னும் சில மாதங்கள் ஆகின்றன. இவர்கள் குடியிருக்கும் வீட்டுக்கு வலது பக்கத்து வீட்டிலிருப்பவள் மெலீசு காப்புக்காரி. இடதுபக்கத்தில் இருக்கிற வீடு, இரண்டடுக்கு மெத்தை வீடு. அந்த வீட்டில் ஒரு புதிய நாட்டுப் பெண் வந்திருக்கிறாள். அவள் கையிலே காப்புப் போட்டுக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக ‘பம்பாய் வளை’ போட்டுக் கொண்டிருக்கிறாள். வந்து விட்டது அனர்த்தம், நமது அம்மாளுக்கு. தனது கைக்காப்பை அழித்து பம்பாய் வளை செய்துகொள்வதென்று தனக்குள் தீர்மானித்துக்கொள்கிறாள். முன்பு சொன்ன தர்க்கங்களும் ஸமாதானங்களும் மறுபடியும் வீட்டில் நடக்கின்றன. கடைசியாய் கணவனுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு, (கணவனுக்கு அதிகச் செலவில்லாமலே), 4 ஸவரனில் ஒரு பம்பாய் வளை செய்து கொள்ளுகிறாள். ‘எப்படியாவது போய்த் தொலையட்டும்; நம்மை ரூபாய் கேட்காமலே நகை செய்து முடித்தாளே’ என்று ஸந்தோஷம் குமாஸ்தாவுக்கு. ‘நாஜூக்காய் பம்பாய் வளை போட்டுக்கொண்டிருக்கிறோம்’ என்ற மகிழ்ச்சி, அம்மாளுக்கு. ‘சேதாரத்திலேயே 4 ரூபாய் கிடைத்தது; கூலியில் 6 ரூபாய் கிடைத்தது’ என்ற ஸந்தோஷம் தட்டானுக்கு.

* * * *

ஐந்தாறு மாதங்கள் கழிந்தபின் இந்த குமாஸ்தா வீட்டுக்குத் தற்செயலாய் வந்த ஒரு அம்மாள் கல்கத்தா வளை என்னும் பெயர் கொண்ட ஒருவித வளை போட்டுக்கொண்டிருந்தாள். அதைப்போலவே தானும் செய்து போட்டுக்கொள்ள வேண்டுமென்று எண்ணிவிட்டாள் குமாஸ்தா வீட்டு அம்மாளும். முன் சொன்ன தர்க்கம் முதலானவைகள் மறுபடியும் கிளம்பின. ‘இரண்டு தடவைகளில் உன்னிஷ்டப்படியே செய்ய நானும் ஸம்மதித்தேன். இந்தத் தரம் நகையை அழிக்கவே கூடாது’ என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார் குமாஸ்தா. அம்மாளும், தன்னாலியன்ற வரையிலும் முயன்றும், அவளுடைய எண்ணம் கைகூடவில்லை. துக்கம் மேலிட்டது. ‘எப்படியாவது என் எண்ணம் நிறைவேறுமாகில், பிள்ளையாருக்கு நாலு தேங்காய்உடைக்கிறேன்’ என்று ப்ரார்த்தனை செய்து கொண்டாள். பிள்ளையார் மிகுந்த வரப்ரஸாதி யாகையாலே, ஒரு வாரத்துக்குள் குமாஸ்தாவுக்கு மலேரியா ஜுரம் வந்துவிட்

டது. ஆறு நாளாய் அவரோடு ஸரியாக முகங்கொடுத்தும் பேசாதவள், அவருக்கு ஜுரம் வந்ததென்று தெரிந்தவுடனே, சிறந்த குணபூஷணியாகி, தன்னுடைய கணவனுடைய மனஸு பூர்ண ஸந்தோஷம் அடையும் படி, பணிவிடை செய்யலானாள்.

மூன்றாம் நாள் ஜுரம் 103 டிக்ரி அடித்தது. இவரைப் பார்க்க வந்த டாக்டர், மெது வாய்த் தலையை அசைத்து, "ஜுரம் ஜாஸ்தியாயிருக்கிறது. இந்த மருந்தை இரவு முழுவதும் இரண்டு மணிக்கொருதரம் கொடுத்து வரவேண்டும். இப்படிச் செய்யத் தவறினால், ஜுரம் அதிகமாய்விடும். பிறகு கொஞ்சங் கஷ்டந்தான்" என்றார்.

அன்றிரவு முழுவதும் அம்மாள் தூங்கவேயில்லை. குமாஸ்தா அவர்களுடைய ரிஸ்ட் வாச்சை (கையில் கட்டிக்கொள்ளும் கடியாரம்) தன் கையில் கட்டிக்கொண்டு (நாகரீகம் மிகவும் முதிர்ந்த இந்த 1917-ம் வர்ஷத்தில், மணிக்கட்டு கடியாரத்தை ட்ராம்வண்டி ஓட்டுபவன் முதல், லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மெம்பர்கள் வரையிலும் ஒவ்வொருவரும் தரித்துக்கொண்டிருக்கிறார்.) பார்த்துப் பார்த்து நிமிஷங்கூடத் தவறாமல் அம்மாள் மருந்து கொடுத்தாள்.

நாலு நாள்களுக்குள் ஜுரம் நின்றுவிட்டது. இதிஹாஸ புராணங்களில் சொல்லியிருக்கிற அருந்ததி முதலிய கற்புக்கரசிகள் போலவே, தனது மனைவியும் தனக்குப் பணிவிடை செய்ததை நினைத்து நினைத்து மனம் பொங்கினார், குமாஸ்தா. அன்றிரவு, தம்பதிகள் குதூஹலமாயிருக்கையில், அம்மாள் புன்னகை செய்துகொண்டே, "நான் உங்களை ஒன்று கேட்கப் போகிறேன். இல்லையென்று சொல்லாமல் தரவேண்டும். தருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"அது என்னவென்று சொல்வாயானால், பிறகு முடியும், முடியாது, என்று சொல்லுகிறேன்."

"அப்படியல்ல. 'தருகிறேன்' என்று முதலில் சொல்லுங்கள். பிறகு, இன்னதென்று சொல்லுகிறேன்."

"என்னால் முடியுமானால் தருகிறேன்" என்று தனக்குள் ஜாக்ரதையாய் பதில் சொன்னார்.

"ஒன்றுமில்லை. பம்பாய் வளையை அழித்து, கல்கத்தாவளை செய்து கொள்ளலாமென்று ஆசைப்படுகிறேன்."

ஜுரத்தில் தனக்கு, மனைவி செய்த பணிவிடைகளை நினைத்து, அவளுடைய வேண்டுகோளை மறுக்கச் சக்தியற்றவரான குமாஸ்தா, "அப்படியே செய்" என்று அரை மனதுடன் சொன்னார். ஆநந்தம் பொங்கி, அவருக்கு ஒரு முத்தம் கொடுத்தாள், ராணியம்மாள்.

கல்கத்தா வளை செய்துகொடுத்ததில் 5 ரூபாய்க்குமேல் லாபம் வந்ததென்று ஸந்தோஷம் அடைந்தாள், தட்டான் மனைவி. கனமுள்ள நகைகளைப் போட்டுக்கொள்வது அநாகரீகமென்றும், லேசான நகைகளைப் போட்டுக்கொள்வதே அந்தஸ்தென்றும், இக்காலத்திய ஸ்த்ரீகளுடைய கொள்கையாதலால், குமாஸ்தா மனைவி சிறப்படைந்தாள். மேலும், 5 ஸவரன் பளுவிருந்த நகை இப்போது ஒரு ஸவரன் எடை குறைந்து, நாலு ஸவரன் எடையிலே நின்றுவிட்டதனால் பளுவும் குறைந்து விட்டதல்லவா?

* * * *

முன் சொன்னவிதமே, நாலு ஸவரன் நகை, மூன்று ஸவரன் பளுவுள்ள மூன்று மோதிரங்களாயின. சில மாதங்கள் சென்றபின், அந்த மூன்று மூர்த்திகளும் இரண்டு ஸவரன் பெறுமான ஜடை நாகரானார்கள்.

* * * *

இப்படியிருக்கும் காலத்தில், ஒரு நாள் சந்த்ர க்ரகணம் சேர்ந்தது. இரவு பன்னிரண்டேகால் மணிக்கு க்ரஹணம் பிடித்து, இரண்டே முக்கால் மணிக்கு விடுமென்று பஞ்சாங்கத்தில் எழுதியிருந்தது. க்ரகண காலத்தில் ஸமுத்ர ஸ்நாநம் செய்வது அவச்யம் என்று சொல்லி, தன்னைக் கடல்கரைக்கு அழைத்துச் செல்ல வேண்டினாள் தனது புருஷனை. நிசி வேளையில் கடல் கரைக்குப் போவதில் அபாய முண்டென்று அவர் பலமுறை சொல்லியும், ராணியம்மாள் அவர் சொல்லைக் கேட்கவில்லை. அந்த அம்மாளுடைய கோபத்திற்கு காரணமுமுண்டு. ஏனெனில், அவ்விருவருக்கும் கல்யாணமாகி, ஐந்தாறு வருஷங்கள் ஆய்விட்டனவென்றாலும், அவர்களுக்கு இன்னும் பிள்ளை பிறக்கவில்லை. இந்த விஷயத்தில் அம்மாளுக்கு பொறுக்கமாட்டாத குறை. க்ரகண காலத்தில் ஸமுத்ர ஸ்நாநம் செய்தால், மறு க்ரகணத்துக்குள் குழந்தை பிறக்குமென்று எதிர் வீட்டுக் கிழவி யொருத்தி சொல்லிவிட்டாள். ஆகவே, ஸமுத்ரத்துக்குப் போகவேண்டியது அவச்யமாயிற்று.

அப்படியே, அவ்விருவரும் சென்றார்கள். கோயில்களில் உத்ஸவாதிகள் நடக்கும்போதும், பாட்டுக் கச்சேரி, அல்லது நாடகம் முதலிய விநோதங்களைப் பார்க்கச் செல்லும்போதும், லக்ஷக்கணக்கான ஜனக்கூட்டம் வருமென்று தெரிந்திருந்தும், நமது வீட்டுப் பெண்டுகள், தமக்குள்ள நகைகளெல்லாவற்றையும் தரித்துக்கொண்டு செல்வது வழக்கம். இப்படிச் செல்வதற்கு ஒரு காரணம் உண்டென்றே தோன்றுகிறது. ஏனெனில், கோர்ட்டு கச்சேரி முதலான இடங்களுக்குப் புருஷர்கள் சென்றால், தலைப்பாகை வைத்துக் கொண்டு போகவேண்டுமென்றும், அழுக்குத் துணிகளோடு செல்லலாகாதென்றும், ஸர்க்கார் சட்டம் பிறப்பித்திருக்கிறார்களல்லவா? அவ்வாறு செல்லாமல், அழுக்கடைந்த உடுப்போடு சென்றால், அந்தக் கச்சேரியிலிருக்கும் அதிகாரிகளுக்கு மிகுந்த அவமரியாதை நேர்ந்ததாக வல்லவோ அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே, ஸாதாரண கச்சேரியில் நூறு அல்லது இருநூறு ரூபாய் சம்பளம் பெறும் அதிகாரிகளுக்கெதிரே செல்கையில் இத்தன்மையுள்ள மர்யாதையோடு செல்லவேண்டுமானால், உலகிலுள்ள அரசர் அனைவருக்கும் அரசனான ஸர்வேச்வரன் குடிகொண்டிருக்கும் கோயிலுக்குள் செல்கையில் ஆடையாபரண பூஷிதராய்ச்செல்வது அவச்யந்தானே. அப்படிச் சென்றாலல்லவோ, இவர்கள் கடவுளுக்கு மர்யாதை செய்தவர்களாவார்கள்.

இந்தக் காரணம்பற்றியோ, அல்லது வேறெந்தக் காரணத்தாலோ, ஸமுத்ர ராஜனுக்கு மர்யாதை செய்ய நினைத்து, தனக்குள்ள ஆபரணங்களை ஒன்றும்விடாமல் அணிந்துசென்றாள் நமது குமாஸ்தா மனைவி. 'பட்டணத்தில் சோம்பேறிகள் அதிகம், தலையிலே ஒன்றும் வைத்துக்கொள்ளவேண்டாம். மேலும், ஸ்நாநம் செய்யப் போகையில், தலையிலே நகை எதற்கு?' என்று பலதரமும் குமாஸ்தா ஆக்ஷேபனை செய்தார். எவ்வளவு சொன்னாலும் பலன் ஒன்றுமில்லை. புத்திமதியெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்காயிற்று.

ஸமுத்ர ஸ்நாநம் முடிந்தது. இருவரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். வழியில், அம்மாள் மிகுந்த கோபத்தோடு,

"நகையைப் போட்டுக் கொள்ளவேண்டாம்; நகையைப் போட்டுக்கொள்ளவேண்டாம், என்று மூச்சுவிடாமல் சொல்லி, ஒரு காலால் நின்றீர்களே. நகை எங்கே போய்விட்டது? நாம் இருக்கும் ஜாக்கிரதையோடிருந்தால், நகை எங்கே போகும்? கால்முளைத்து நடந்து போய்விடுமா, அல்லது இறக்கை முளைத்துப் பறந்துபோய்விடுமா?——" என்று சண்டமாருதம்போலச் சொல்லிக்கொண்டே வருகையில், இவர்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த நெடுங்காலன் ஒருவன், சடுக்கென்று

முன்னே வந்து, இந்த அம்மாள் கையில் வைத்திருந்த ஒரு சிறிய துணி மூட்டையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டுபோய் விட்டான். முப்பத்தாறே முக்கால் ரூபாய் பெறுமான புதிய ஆரணிச் சேலை ஒன்றும், நாலு ரூபாய் பெறுமான ரவிக்கை ஒன்றும், ஜடை நாகரும், சில்லரை ஆறே காலணாவும் அந்த மூட்டையிலிருந்தன.

"ஐயையோ! திருடன்! திருடன்!" என்று இவ்விருவரும் கூவுவதற்குள்ளே, மூட்டை திருடினவன் மறைந்துபோய்விட்டான்.

"புத்தியில்லாத மூடமே. பாதி ராத்ரியில் ஸமுத்ர ஸ்நாநம் வேண்டாம்; நகை போட்டுக்கொள்ளவேண்டாம், என்று நான் ஆயிரந் தடவை முட்டிக்கொண்டேனே. என் வார்த்தையைக் கொஞ்சமாகிலும் கேட்டாயா? படு, வந்ததை. கழுத்திலிருப்பதையும் கத்தரித்துக் கொண்டுபோகாமல், கை மூட்டையை மாத்ரம் திருடிக்கொண்டு போனானே, அவன் ஒரு பெரிய முட்டாள்." என்றுகூறி, பற்களை நெறுநெறென்று கடித்தார், குமாஸ்தா.

"திருடன் நாசமாய்ப் போனான். வீட்டிலிருந்து புறப்படுவது முதல் 'நகை போய்விடும், நகை போய்விடும்' என்று மூச்சுவிடாமல் அவசகுனம்போல அஸ்து பாடிக்கொண்டு வந்தீர்களே; உங்களிஷ்டப்படியே தான் ஆய்விட்டது. இப்போது ஸந்தோஷந்தானே! மனம்போல மங்கிலியம். உங்கள் வாக்கில் சனீச்வரன் இருக்கிறது. அதன்படியே தான் எல்லாம் நடந்து வருகின்றன" என்றாள் குமாஸ்தா மனைவி.

* * * *

இந்த விதம் தட்டான் தின்பது பாதி; சேதாரத்தில் குறைவது பாதியாக, ஆறு வர்ஷத்திற்குள், ஆறு ஸவரன் இரண்டு ஸவரனாகி, அந்த இரண்டு ஸவரனும் இரண்டு நிமிஷத்தில், இருட்டில், இருந்த இடம் தெரியாதபடி பறந்து போயிற்று.

இதுதான் 'இடையன் கெடுத்தது பாதி, மடையன் கெடுத்தது பாதி' என்பதற்கு ஸரியான திருஷ்டாந்தம்.

இதைப்பற்றிய காவடிச் சிந்து.

["மஞ்சுளிகர் குந்தளம்" என்ற காவடிச்சிந்து மெட்டு.]

† அழகு காப்பறு ஸவரன் கொண்டிருந்து
சில மாஸமாமுன், மனதாசையாலே
ஐந்து ஸவரன் ஆயதே மெலிந்து,—பம்பாய்
வளையலாம் உரு மருவிச்கல்கத்தா வளையல் ஆன
[பின் விரைவுடன் விரல்
மோதிரம் மூன்றாயதே திரிந்து
ஜடை நாகர் ஆகி, கடல் ஆடு நாளில்
கள்வன் கையில் சேர்ந்ததே விரைந்து.

எஸ். நரஸிம்மாசாரி.

† இது, கதை எழுதியவர் தாமே இயற்றியது.

## NAKKIRAR.

By PANDIT V. SUBRAMANIA AIYAR.

## நக்கீரர்.

பாண்டிய நாட்டில் மதுரை நகரத்தில் ஸரஸ்வதியின் அவதாரமாக விளங்கிய நக்கீரதேவர், கபிலதேவர், பரணர் முதலிய 48-புலவர்களும் ஒரு நாள் ஸோமஸுந்தரக் கடவுளின் கோயிலை அடைந்து "எம்பெருமானே! எங்களிடம் அநேக புலவர்கள் வந்து விண்வாதம் செய்கிறார்கள். அவர்கள் வித்தையைப் பரீக்ஷிக்கும் கருவியாகத் தாங்கள் ஏதேனும் ஒன்று கொடுத்தருளவேண்டு"மென்று கேட்டுக்கொண்டார்கள். ஈச்வரன் உடனே அவர்களுக்கு ஒரு முழ அளவுள்ள ஒரு சதுரமான பலகையைக் கொடுத்தார். "இது உங்கள்



[illegible] ஸமமான வித்தையையுடைய புலவர்களுக்கு முழம் முழமாக வளர்ந்து இடங்கொடுக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். வித்வான்கள் அதைப் பெற்று ஸந்தோஷப்பட்டு, மதுரை ஸோமஸுந்தரர் ஆலயத்தின் வடமேற்கே அரசனால் ஒரு மண்டபம் கட்டுவித்து அதில் அந்தப் பலகையுடன் இருந்து தமிழ்ப் பாஷையை வளர்த்து வந்தார்கள். இந்தப் பலகையே சங்கப்பலகை யென்பது. அந்தப் புலவர்கள் நிறைந்த சங்கத்தில் சிவபெருமானே இறையனார் என்னும் திருநாமத்துடன் ஒரு புலவராய் இருந்து, அப்புலவர்களுக்கு ஏற்படும் ஸந்தேகம் முதலியவற்றை நீக்கிச் செந்தமிழை வளர்த்துவந்தார்.

அந்தக்காலத்தில் பாண்டியநாட்டில் வங்கிய சூடாமணி என்னும் பாண்டிய அரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் வஸந்த காலத்தில் ஒரு நாள் மேல்மாடியில் தன் மனைவியுடன் ஏகாந்தமாய் இருந்தான். அந்த ஸமயத்தில் தென்றலோடு கலந்து ஒரு திவ்யமான வாஸனை வீசிற்று. அரசன் உடனே அது தன் மனைவியின் கூந்தலிலிருந்து வந்த மணமென்று எண்ணினான். ஸ்த்ரீகளின் கூந்தலுக்கு இவ்வித மணம் எப்படி இயற்கையாகும் என்று ஸந்தேகித்தான். இவ்விஷயத்தை அவன் ஒருவரிடமும் தெரிவிக்கவில்லை. அவன் உடனே ஸங்கமண்டபத்திற்குப்போய் விஷயமின்னதென்று சொல்லாமல் 'என்மனத்தில் [illegible] ஸந்தேகம் உள்ளது. அந்த ஸந்தே[illegible] வெளிப்படுத்திச் சொல்லுகிறவர் [illegible] ஆயிரம் பொன் இனாம் தருவேன்' என்று சொல்லி, ஆயிரம் பொன் உள்ள முடிப்பைக்கட்டி அந்த ஸங்க மண்டபத்தில் உயரே கட்டிவைத்தான். ஸங்க மண்டபத்திலுள்ள பல வித்வான்களும் தமக்குத் தோன்றியபடியெல்லாம் பாடல்கள் இயற்றி அரசனிடம் காட்டினார்கள். அப்பாடல்களின் கருத்துக்கள் ஒன்றையும் அரசன் கொண்ட ஸந்தேகத்தை நிவர்த்திக்கக்கூடியதா யிருக்கவில்லை. ஆகவே, நெடுநாட்கள்வரையில், அப்பொன்முடிப்பு அறுப்பவரில்லாமல் இருந்தது.

இப்படியிருக்கையில், நாட்டில் மழையில்லாமல், வளம் குறைந்து பஞ்சம் உண்டாயிற்று. தண்ணீர் கூட அகப்படாமல் கணக்கு வழக்கில்லாமல் உயிர்கள் பதைத்து இறந்தன. இப்படி நாட்டில் பஞ்சம் முற்றிப்போய் ஜனங்கள் அவதிப்படும் காலத்தில், மதுரையில் தருமி என்ற ஒரு ப்ராமணன், பஞ்சத்தினால் அடிபட்டு மிகவும் கஷ்டப்பட்டவனாய் ஸோமஸுந்தரக் கடவுளினுடைய ஆலயத்தை அடைந்தான். "க்ருபாநிதியே! இனி இவ்விடம் இருந்தால் நான் செத்துப் போய்விடுவேன், ஆகவே நான் வேறு தேசம் போய் பொருள் ஸம்பாதித்து ஜீவனம் செய்கிறேன். அப்படிப் போக உத்தரவு கொடுக்கவேண்டு"மென்று தருமி ஈச்வரனை நோக்கி வேண்டிக் கொண்டான். அப்போது ஈச்வரனுக்கு க்ருபை பிறந்தது. "பக்தனே, வங்கிய சூடாமணி என்னும் பாண்டியராஜன், தம் கருத்தை யுணர்ந்து சொல்பவர் பெற்றுக்கொள்ளும்படியாய் ஸங்க மண்டபத்தில் ஆயிரம் பொன் தூக்கிக் கட்டியிருக்கிறான்; நான் ஒரு பாடல் எழுதித் தருகிறேன், அதைக்கொண்டுபோய் அரசனுக்குக் கொடுத்து அவன் கொடுக்கும் த்ரவ்யத்தைப் பெற்று நீ ஸுகமாய் வாழ்வாய்" என்று சொல்லிப் பின்வரும் பாடலை அளித்தார்.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பீ!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ;
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே!"

(இதன் அர்த்தம்.) புஷ்பங்கள்தோறும் போய் அவைகளின் வாஸனையையே அறியும் தொழிலையுடைய அழகிய இறக்கைகளையுடைய வண்டே! பதிவ்ரதா தர்மம் மிகுந்த

பத்மினி ஜாதி ஸ்த்ரீகளின் கூந்தலைக்காட்டிலும் அதிக வாஸனையுடைய புஷ்பம் ஒன்று இருக்கிறதா? சொல்வாயாக.

இப்பாட்டைப் பெற்ற தருமி, அதைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தான், அரசனும் அந்தப் பாட்டின் கருத்தும் தன் கருத்தும் ஒன்றாயிருப்பதைப் பார்த்து ஸந்தோஷப்பட்டு, அதை ஸங்கப் புலவர்களிடத்தில் கொண்டுபோய் அரங்கேற்றச் சொன்னான். அப்படியே தருமி ஸங்கப் புலவர்களிடதிற் கொண்டுபோய்க் காட்ட, ஸங்கப் புலவர்களுள் ஒருவராகிய நக்கீரர், கல்விச் செல்வம் பெற்ற கர்வத்தினால், அப்பாட்டில் குற்றமுள்ளது என்று சொன்னார்.

உடனே, தருமி விஸனமடைந்து, ஸோமஸுந்தரக் கடவுளின் ஆலயம் சென்று நடந்ததைச் சொன்னான். உடனே ஈச்வரனும் புலவர் வேஷம்பூண்டு அவனோடுகூட ஸங்கமண்டபத்துக்கு வந்து,

"அங்கங்குலுங்க அரிவாளினெய்தடவிப்
பங்கம்பட விரண்டுகால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீரென அறுக்கும் கீரனோ வென்கவியை
யாராயுமுள்ளத் தவன்"

என்று சொன்னார்.

(சங்குகளை வளையல்களாகச் செய்வதற்கு, அரிவாளில் நெய்தடவிக்கொண்டு, சங்குகளைக் கீர்கீரென் றறுக்கும் தொழிலுடைய நக்கீரனோ என் கவியை ஆராயத் தகுந்தவன்" என்பது இப்பாட்டின் பொருள்).
இதைக் கேட்ட நக்கீரர்

"சங்கறுப்ப தெங்கள்குலம் தம்பிராற் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ—சங்கை
யரிந்துண்டு வாழ்வோ மரனாரைப்போல
விரந்துண்டு வாழ்வதிலை."

என்ற பாடலை நக்கீரதேவர் சொன்னார். (சங்குகளை யறுத்து வளையல்கள் செய்வது எங்களது ஜாதித் தொழில், சங்கரன் பிறந்த குலமெது? அத்தொழில்களைச் செய்துவரும் பணத்தைக்கொண்டு நாங்கள் ஜீவிக்கிறோம், ஈசுவரனைப்போல நாங்கள் பிக்ஷை யெடுத்துப் பிழைப்பதில்லை.—என்பது இதன் அர்த்தம்).

பின்னும் "தாங்கள் சொல்லிய பாடலின் பொருள் குற்றமுடையது. நானே குற்றமுடையது என்றேன்" என்றார். ஈச்வரனும் குற்றம் என்ன என்று கேட்க நக்கீரர், கூந்தலுக்கு மல்லிகை முதலிய புஷ்பச் சேர்க்கையினாலும் தைலாதிகளின் சேர்க்கையினாலும் உண்டாகும் மணமேயன்றி, வேறெவ்விதத்திலும் இயற்கையான மணம் அதற்கில்லை; ஆகவே இல்லாத விஷயத்தை எடுத்துக் கூறியதுதான் குற்றமென்றார். உடனே ஈச்வரன் தேவதா ஸ்த்ரீகளின் கூந்தலுக்கு இயற்கையாய் மணமுண்டல்லவா என்றார். அவர்கள் கூந்தலும், மந்தாரம், பாரிஜாதம் முதலிய கல்பகத் தருக்களின் புஷ்பங்களுடன் கலந்துள்ளதனால், அவர்களின் கூந்தலும் செயற்கை வாஸனையை யுடையதாகும் என்றார் நக்கீரர். உடனே கடவுள் நக்கீரரை நோக்கி உன்னுடைய குலதெய்வமாகிய ஞானப்ரஸூநாம்பா என்னும் காளஹஸ்தீச்வரரின் மனைவியின் கூந்தலுக்காவது இயற்கை மணமுண்டல்லவா என்று கேட்டார். நக்கீரரும் ஒரே பிடிவாதமாய் அந்த அம்பிகையின் கூந்தலும் செயற்கை மணமுடையதே என்றார். ஈச்வரன் இதைக்கேட்டுக் கோபங்கொண்டு தம் நெற்றிக்கண்ணையும் சடையையும் காட்ட, நக்கீரன், "நீர் உம்முடைய தேஹம் முழுமையும் காட்டினாலும் உமது பாடல் குற்றமுடையதுதான்" என்றார். ஈச்வரனும் "வேதங்களால் புகழப்படும் அம்பிகையின் கூந்தலும் செயற்கை மணமுடையது என்று என் வார்த்தையையும் மறுத்துச் சொன்னையாதலால், நீ குஷ்டநோய்கொண்டு அலைக" என்று சாபம் கொடுத்தார். உடனே நக்கீரதேவர் பயந்துபோய், அறிவில்லாமல் தான் செய்த பிழையை மன்னிக்கவேண்டுமென்று,



ஈச்வரன் பாதாரவிந்தங்களில் பணிந்து கேட்டார். ஈச்வரன் மனமிரங்கி 'நீ கைலாஸம் சென்று தர்சனம்செய்து வருவாயானால் உன் குஷ்டநோய் நிவாரணமாகும்" என்று சொல்லி மறைந்துவிட்டார். தருமியும், பொன் முடிப்பை அரசனிடமிருந்து பெற்றுப்போய் ஸுகமாக வாழ்ந்தான்.

பண்டித. வி. ஸுப்ரமண்ய ஐயர்.

## INDIGESTION AMONG CATTLE.

### கால்நடைகளுக்குவரும் அஜீர்ணம்.

அஜீர்ணமென்பது ஜீர்ணக்கருவிகள் கெடுதலடைவதால் ஏற்படும் பல வ்யாதிக் குறிகளுக்கும் பொதுவாய் வழங்கப்படும் ஒரு பெயராகும். அது கால்நடைகளுக்கு விசேஷமாய் வரக்கூடிய வ்யாதிகளில் ஒன்றாகும். அது தீவ்ரம், பாதிதீவ்ரம், நாள்பட்டது என மூன்று வகைப்படும். அநேக கேஸுகளில ஜீர்ணக் கருவிகள் எல்லாமே கெடுதலடைவதுண்டு. சில ஸந்தர்ப்பங்களில் ஜீர்ணக்கருவிகளில் இரண்டொரு பாகங்களே கெடுதலடையலாம்.

இந்த வ்யாதி ஆகாரக் கோளாறுகளால்தான் விசேஷமாக உண்டாகிறது. கன்றுபோட்டு அதிக நாளாகாத மாடுகளுக்குத்தான் இந்த வியாதி விசேஷமாகக் காணும். நமது தேசத்தில் இந்த வ்யாதி கோடை காலத்தில்தான் விசேஷமாக உண்டாகிறது. அப்போது தீவனப்பொருள் குறைவாதலால், மாடுகளும் ஆடுகளும் கெட்டியும் நாருள்ளதுமான புல்லையும் நாணல்களையும் மரஞ்செடிகளின் சிறு கிளையும் தின்ன நேரிடுகிறது. மற்ற மாடுகளைவிட வேலைசெய்யும் மாடுகளுக்கும், கறவை மாடுகளுக்கும் அதிக ச்ரமமேற்படுமாகையால், அதோடு உபயோகமற்ற மேற்சொன்ன உணவைத் தின்ன நேரிட்டால், அவைகளினுடைய ஜீர்ண சக்தி குறைந்துபோய், ஆகாரம் சரிவர தேகத்தில் சேருவதில்லை.

#### வ்யாதியின் அறிகுறிகள்.

இந்த வ்யாதி கண்ட மாடுகளுக்கு பசியின்மையுண்டாகும். அசைபோடுவது குறைந்தோ, நின்றே போகும். அவை மந்தமாயிருக்கும். மாடு மெலிந்து தோலொட்டிப் போயிருக்கும். மலச்சிக்கல் ஏற்படுவதுமுண்டு. மாட்டின் ச்வாஸம் கெட்ட வாஸனை யுள்ளதாயிருக்கும். பசுக்கள் பால் குறைவாகவே கறக்கும். அதுவும் ருசியாயிராது. மாடு வேகமாய் மூச்சுவிடும். அடிக்கடி உறுமும். வலி யெடுப்பது போல பற்களைக் கடிக்கும். சில ஸமயங்களில் மாடுகள் தொண்டை கம்மினதுபோல் இருமலாம். அதோடு மாடு தள்ளாடி நடக்கலாம். பாதி ப்ரஜ்ஞையிழந்தும் போகக்கூடும். சில ஸமயங்களில் மாட்டுக்கு வலிப்பு ஏற்படும். அநேக ஸந்தர்ப்பங்களில் மாடு இரையே எடுக்காமலிருந்துவிடும். தக்க சிகித்ஸை செய்யாவிட்டால், ஆகாரமில்லாமலே இறந்து போகும்.

சில கேஸுகளில் இரைப்பையும் குடலும் வீங்கிப்போவதுண்டு.

பாதி தீவ்ரமான வ்யாதியில் தக்க வைத்யம் செய்வதால் குணமேற்படுவதுண்டு. தீவ்ர வ்யாதிகளில் நரம்புக் கோளாறுகளும், ஜீர்ணக்கருவிகளின் வீக்கமும் ஏற்பட்டால் மாடுகள் அநேகமாய் இறந்துபோவதுண்டு.

நாள்பட்டவகை வ்யாதிக்கு சிகித்ஸைசெய்வதில் ரொம்ப ஜாக்ரதை வேண்டும். வெகுநாள் தொடர்ச்சியாக சிகித்ஸை செய்து வர வேண்டும். இந்த வகை வியாதியில் குணம் தாமஸமாகத்தான் ஏற்படும்.

#### சிகித்ஸை.

வ்யாதி கண்ட மாடுகளை நல்ல ஸுகாதார

மான இடங்களில் கட்டி வைக்கவேண்டும். நல்ல உணவாகப் பார்த்து அவைகளுக்குப் போடவேண்டும். நோய் கண்ட மாடுகள் விசேஷமாய் இரை எடுப்பதில்லை. கெட்டியாக இராத லின்ஸீட் கஞ்சியாவது அரிசிக் கஞ்சியாவது அவைகளுக்குக் கொடுக்கவேண்டும். ரொம்ப இளசானதும், ஸுலபமாக ஜீர்ணமாகக் கூடியதுமான உணவை முதலில் சிறு அளவில் கொடுத்து பிற்பாடு கொஞ்சங்கொஞ்சமாக அதிகப்படுத்தவேண்டும்.

மாடுகளுக்கு பின்வரும் பேதி மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| எப்ஸம் ஸால்ட் | 1 ராத்தல் |
| பொடிசெய்த சுக்கு | ½ ஔன்ஸ் |
| பொடி செய்த கந்தகம் | 2 ஔன்ஸ் |
| தேன்பாகு | 8 ஔன்ஸ் |

இவைகளைக் கலந்து பட்டணம் படியால் அரையே அரைக்கால்படி சுடு ஜலத்தில் சேர்த்துக் குளிர்ந்தபின் கொடுக்கவும். ஆனால் மாடு பலஹீனமாயிருந்தால், மருந்தை மூன்று பங்காகச் செய்து தினம் ஒரு பாகமாக சேர்ந்தாற்போல் 3 நாளைக்குக் கொடுக்கவேண்டும். இந்த மருந்தை நிறையக் கஞ்சியோடும் தேன்பாகோடும் கலந்து கொடுக்கவேண்டும். மாட்டுக்கு எதிரில் ஒரு பெரிய கல்லுப்பை நக்குவதற்கு வைக்கவேண்டும். வேண்டிய மட்டும் குடிக்க ஜலம் கொடுக்கவேண்டும். பிறகு பின்வரும் பலவ்ருத்தி மருந்துகளில் ஒன்றைக் கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| (1) | நாட்டு சாராயம் | 4 ஔன்ஸ் |
| | பொடிசெய்த சுக்கு | ½ ,, |
| | பொடி செய்த மிளகு | 2 ட்ராம் |

இவைகளைக்கூட்டி பட்டணம் படியால் காலேயரைக்கால்படி கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| (2) | நவச்சாரம் | ½ ஔன்ஸ் |
| | பொடி செய்த சுக்கு | ½ ,, |
| | பொடிசெய்த எட்டிக்கொட்டை விதை | 1 ட்ராம் |

இவைகளை ஆறின கஞ்சியில் கலந்துகொடுக்கவும்.

இவைகளுக்குப் பிறகு கொஞ்சநாளைக்கெல்லாம் பின்வரும் மருந்தைக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| பொடிசெய்த பொட்லுப்பு | ½ ஔன்ஸ் |
| பொடிசெய்த கந்தகம் | 1 ,, |
| பொடிசெய்த ஓமம் | ½ ,, |
| பொடிசெய்த எட்டிவிதை | 1 ட்ராம் |

இவைகளைக் கலந்து பட்டணம் படியால் கால்படி கஞ்சியில் கலக்கி தினம் கொடுக்கவும்.

மேற்சொன்ன இரண்டு மருந்துகளில் ஒன்றைக் காலையிலும் பின்வரும் பலவ்ருத்தி மருந்தை ஸாயந்திரமும் உபயோகிப்பது நல்லது.

| | |
|---|---|
| பொடிசெய்த அன்னபேதி | ½ ஔன்ஸ் |
| பொடிசெய்த எட்டி விதை | 1 ட்ராம் |
| பொடிசெய்த நிலவேம்பு | 1 ஔன்ஸ் |

இவைகளைக் கலந்து தீனியோடு கலந்தும், கால்படி கஞ்சியில் கலந்தும் தினம் கொடுக்கலாம்.

இப்படி 10 நாள் காலையிலும் மாலையிலும் மருந்து கொடுத்து வரவேண்டும். மாடுகளை சரியாய் ஸம்ரக்ஷித்து வருவதோடு, ஆகார விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

ஆமணக்கெண்ணெயும் தேன்பாகும் கலந்துகொடுத்து மலச்சிக்கல் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அதிஸாரம் உண்டாயிருந்தால் பின்வரும் மருந்தைக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| பொடிசெய்த சீமைச்சுண்ணும்பு | 1 ஔன்ஸ் |
| பொடிசெய்த கத்தைக்காம்பு | ½ ,, |
| பொடிசெய்த ஓமம் | ½ ,, |

இவைகளைக் கால்படி கஞ்சியில் கலந்து தினம் இரண்டு முறையாகக் கொடுக்கவேண்டும்.



# SOME WAYS OF PLANT PROPAGATION.

## செடிகள் பரவும் விதங்கள்.

செடிகொடிகள் பரவுவதற்கு இயற்கையில் ஏற்பட்டிருக்கும் ஸாதனங்கள் பலவகைப்படும். செடிகள் ஒரே இடத்திலேயே இருப்பதால், அதன் விதைகள் தூரத்தில் சிதறிப் போக மார்க்கமில்லாவிட்டால், ஓரிடத்திலிருக்கும் செடிகொடிகள் அந்த விடத்திலேயே வ்ருத்தியாகி வருமேயொழிய, மனிதர்கள் அல்லது ம்ருகங்களின் ஸகாயமில்லாமல் இதர இடங்களில் பரவுவது முடியாது. இதற்காக இயற்கையில் பல உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில செடிகளின் விதைகள் பக்வமாகிக் காய்ந்ததும் வெடித்துச் சிதறுகின்றன. வேறு சில செடிகளின் விதைகள் லேசாயிருப்பதால் காற்றால் தூரமான இடங்களுக்கும் போய் அங்கே முளைக்கின்றன. சில விதைகளோடு பஞ்சு போன்ற பொருள் ஒட்டிக்கொண்டிருப்பதால் அவைகள் காற்றில் பறப்பது ஸாத்யமாகிறது. மனிதர்களும் ப்ராணிகளும் [illegible]ஞ்செடிகளின் விதைகளை சிதறச்செய்யவேண்டுமென்றே, அவற்றின் விதைகளின் மேல் பழம் என்னும் சதைப்பற்றுள்ள பாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ம்ருகங்களும் பறவைகளும் அப்பழங்களைத் தின்று விதைகளையும் கொட்டைகளையும் கண்ட விடங்களில் போட, அவைகள் அங்கங்கே முளைத்து வ்ருத்தியாகின்றன.



ஸாக்ஸிப்ரேஜ் செடி வ்ருத்தியாகும் விதம்.

இவைகளைத்தவிர வேறொரு விசேஷமுறையும் இருக்கிறது. அதாவது செடிகளின் இலைகளும் இதர பாகங்களும் வளர்ந்து வேறு இடம் போய் அங்கே வேரூன்றுவதே. மலைப்ராந்தியங்களில் இந்த விசேஷத்தை அதிகமாகப் பார்க்கலாம்.

ஸாக்ஸிப்ரேஜ் என்று ஒருவகைச் செடியிருக்கிறது. இது மலைப்பாங்கான இடங்களில் வளருகிறது. பாறைகளில் செடி வளருவதற்கேற்ற வஸதியான இடுக்குகள் அதிகம் இருக்கமாட்டா. இந்தச் செடியானது தனது வம்சத்தை வ்ருத்தி செய்ய பின்வருமாறு செய்கிறது.

இதன் தண்டுகள் மெல்லிய கொடிபோல ரொம்ப நீளமாக வளரும். இப்படி வளர்ந்துகொண்டே தரையோடு தரையாய்ப் போகையில் பாறையில் ஏதாவது இடுக்குகள் ஏற்பட்டு, அதில் தங்கினால், அங்கே உடனே தண்டில் ஒரு முளை ஏற்படுகிறது. இது வேரூன்றி செடியாகிறது. புதுச்செடி ஸ்திரப்பட்டதும் இதற்கும் தாய்ச்செடிக்கும் ஸம்பந்தப்பட்டிருந்த தண்டு பட்டுப்போகிறது. புதுச்செடி தனியாக வளருகிறது. இதிலிருந்தும் முன் சொன்னதுபோல தண்டுகள் புறப்பட்டுப் போய் புதுச் செடிகள் ஸ்தாபிக்கும். இப்

படியே இந்தச் செடியானது சுற்றுப்புறமெல்லாம் தனது வம்சத்தை வ்ருத்தி செய்துவிடும்.

வாக்கிங் பேர்ன் அதாவது நடக்கும் கல்லுருவி என்று பெயர்கொண்ட ஒருவகைச் செடி வட அமெரிக்காவில் இருக்கிறது. இதன் இலைகள் ரொம்ப நீண்டு சாய, சுற்றுப்புறத்தில் உள்ள பூமியில் அவைகளின் நுனிபடும். உடனே நுனிகளில் ஒரு சிறு குருத்து உண்டாகி வேரூன்றி சிறு செடியாகிவிடும். பிறகு தாய்ச் செடியின் ஸம்பந்தம் விட்டுப்போக சிறு செடிகள் தனியாக வளருகின்றன. இவ்விதம் ஒரு கல்லுருவியைச் சுற்றி பல சிறு செடிகள் உண்டாகிவிடும். இந்தச் சிறு செடிகளும் தாய்ச் செடிகள் போலவே வம்சத்தை வ்ருத்தி செய்கின்றன.

லிலி ஜாதியைச்சேர்ந்த ஒரு ஜப்பானியச் செடி பூத்த பிறகுங்கூட, அதன் இலைத்தண்டுகள் வளர்ந்துகொண்டே போகின்றன. ரொம்ப நீளமானதும் வளைந்து அவைகளின் நுனிகள் தரையைத் தொடுகின்றன. உடனே அங்கே முளைகள் ஏற்பட்டு புதிதாக சிறுசெடிகள் உண்டாகின்றன. சிறு செடிகள் ஸ்தாபிதமானதும் தாய்ச்செடி பட்டுப்போகிறது.



ஜப்பான் தேசத்து லிலி ஜாதிச்செடி.

ஒருவகைச் சப்பாத்திக்கள்ளி தனது வம்சத்தை வ்ருத்தி பண்ணச்செய்யும் வழி வெகு விசித்ரமானது. இந்தக் கள்ளியின்மேலெல்லாம் சிறுசிறு கள்ளிச்செடிகள் வளரும். சிறு செடிகள் நல்ல ஆக்ருதியடைந்தவுடன் அவை தாய்ச்செடியிலிருந்து அற்றுவிழுந்து விடுகின்றன. இந்த வகைச்செடிகள் பாறையான ப்ரதேசங்களில் தான் அதிகம். விழுந்த சிறு செடிகள் பாறையில் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடி, இடுக்குகள் ஏதாவது வழியில் சேர்ந்தால் அவைகளில் சிக்கிக்கொள்ளுகின்றன. அங்கே அவை வேரூன்றி வளருவதற்கேற்ற வஸதிகள் அதாவது மண், ஈரம் இவைகள் இருந்தால் அங்கே முளைத்து விடுகின்றன.

தென் அமெரிக்காவில் காண்டில் ப்ளாண்ட் என்று ஒருவகைச்செடி இருக்கிறது. இதன் கிளைகள் சதைப்பற்றுள்ளனவாக இருக்கும். இவைகள் ஒன்றோடொன்று மெல்லிய கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்கும். பார்வைக்கு மெல்லிய கயிறுகளால் இறுக்கிக் கட்டப்பட்டிருப்பதுபோல இருக்கும். கிளைகளை சற்று அழுத்தினால்போதும். உடனே கட்டுகள் அறுந்து கிளைகளெல்லாம் சிதறிப் போகும். காற்றடிக்குங்காலங்களில் கிளைகளெல்லாம் கட்டறுந்துவிழுந்து பாறைகளில் சிதறி உருண்டு, முளைக்கத்தகுந்த இடம் வந்ததும், வேர்விட்டு புதுச் செடிகளாக வளரும்.



# GOVERNMENT AID TO HOME INDUSTRIES IN RUSSIA.

## ரஷ்யாவில் வீட்டுத் தொழில்களுக்கு ஸர்க்கார் உதவி செய்வது.

ரஷ்யாவில் வீட்டுக் கைத்தொழில்கள் கவர்ன்மெண்டால் ஆதரிக்கப்பட்டு வ்ருத்தியடைந்து வருகிறதாகத் தெரிகிறது. அந்த தேசத்தின் வட பாகங்களிலும் மத்ய பாகங்களிலுமுள்ள மாகாணங்களில் தான் அவைகள் விசேஷம். அங்கே வ்யவஸாயிகளும் இதர குடிகளும் அவைகளை வ்யவஸாயத்தோடு உதவித் தொழில்களாகவோ, முக்யத் தொழில்களாகவோ கைக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பற்பல தொழில்கள் வீட்டுக் கைத்தொழில்களாகச் செய்யப்பட்டு வருகின்றன. மரத்தில் வேலைசெய்தல், லினன், பட்டு, ஸரிகை, பருத்தி இவைகளால் துணிகள்செய்தல், பர் என்னும் மெல்லிய ரோமம், தோல், உலோகங்கள் முதலியவைகளைக்கொண்டு உபயோகமுள்ள ஸாமான்கள் செய்தல், பார்வைக்கு லக்ஷணமான ஸாமான்கள் செய்தல், கொம்பினால் ஸாமான்கள் செய்தல், மண்பாண்டங்கள் செய்தல் முதலியவைகள் முக்யமாய் கவனிக்கப்பட்டு வருகின்றன.

தற்காலத்தில் ஜனங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப மேற்சொன்ன தொழில்களில் பல ப்ரபலமாயும், சில தாழ்ந்த நிலைமையிலும் இருக்கின்றன. இந்த வீட்டுக் கைத்தொழில்களால் வர்ஷந்தோறும் 300 கோடி ரூபாய்க்கு ஸாமான்கள் செய்யப்படுகிறதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

ரஷ்யாவில் வீட்டுக் கைத்தொழில்கள் ஆதிகாலம் தொட்டு நடந்து வருகின்றனவென்றாலும் 1870-ம் வர்ஷம்முதல் கொண்டுதான் கவர்ன்மெண்டாருடைய ஆதரவைப் பெறலாயின. அந்த வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் அவைகளைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமித்தார்கள். 1888-ம் வர்ஷத்தில் கவர்ன்மெண்டாரே அவைகளை ஒழுங்குபடுத்தி நடத்த ஆரம்பித்தார்கள். 1894-ம் வர்ஷத்தில் விவஸாய மந்த்ரி கவனிக்கலானார்.

அந்த மந்த்ரிக்குக் கீழ்ப்பட்டு முனிஸிபாலிடிகளும், இதர ஸ்தல ஸ்தாபனங்களும், வ்யவஸாய ஸங்கங்களும் அந்தந்த ப்ரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கமிட்டிகளும் வீட்டு கைத்தொழில் விஷயங்களை கவனித்து வருகின்றன.

### கவர்ன்மெண்ட் பண உதவி.

கவர்ன்மெண்டார் குடும்பக் கைத்தொழில்களின் அபிவ்ருத்திக்காக வர்ஷந்தோறும் பணவுதவி செய்துவருகிறார்கள். அந்தப் பண உதவியும் வர்ஷந்தோறும் அதிகரித்து வருகிறதென்பதை அடியில் வரும் விவரத்தால் கண்டுகொள்ளலாம்.

| வருஷம் | ரூ. |
|---|---|
| 1888 | 40,000 |
| 1903 | [illegible]50,00 |
| 1909 | [illegible]8,62 |
| 1910 | 11[illegible]0,32 |
| 19[illegible] | 1[illegible],63,739 |
| 1916 | 36,44,538 |

காப்பகம் 184838

1917-ம் வர்ஷத்தில் 36,90,000-ரூபாய் செலவு செய்ய உத்தேசித்திருந்தார்களாம். செய்யும் ஸாமான்களை நேர்த்தியாகவும் நன்றாகவும் செய்யும்படி தொழிலாளிகளைப் பழக்குவதும், பொதுவாய்க் கைத்தொழில்களை வ்ருத்திசெய்வதும் ஆகிய இரண்டுமே கவர்ன்மெண்டின் முக்ய நோக்கங்களாகும். இதற்காக கவர்ன்மெண்டார் தொழில் பாடசாலைகள் ஸ்தாபித்துவருகிறார்கள். பெரிய தொழில்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்போதைக்கப்போது ஜனங்களுக்கு சிறு வகுப்புகள் ஏற்படுத்தி தொழில்முறைகளைக் கற்பித்து வருகிறார்கள். அநேக இடங்களில் ம்யூஸியங்கள்

ஸ்தாபித்திருக்கிறார்கள். பற்பல விடங்களில் பொருள் காட்சிசாலைகள் நடத்துகிறார்கள். 1912-ம் வர்ஷத்தில் 120-பொருள் காட்சிசாலைகள் நடந்தன. வீட்டுக் கைத்தொழில்களில் அமர்ந்துள்ளவர்கள் தங்கள் தொழிலுக்குவேண்டிய மூலப்பொருள்களை மொத்தத்தில் தருவிக்கவும், அவைகளை சரியாக விற்கவும் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்து வருகிறார்கள்.

ஸாமான்களை விற்றல்.

ஸாமான்களை வெளிநாடுகளில் ஸௌகர்யமாய் விற்பதற்காக கவர்ன்மெண்டாரே சென்ற 1915-ம் வர்ஷக் கடைசியில் ஒரு உத்யோகஸ்தரை அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கு அனுப்பினார்கள். அவர் வீட்டுக்கைத்தொழில் ஸாமான்களில் மாதிரிக்காக ஒவ்வொன்று எடுத்துக்கொண்டு போயிருந்தார். அவைகளைப்பார்த்து அமெரிக்கர்கள் அந்த ஸாமான்களில் சிலவற்றை வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இரண்டு பெரிய அமெரிக்கக் கம்பெனிகள் இவைகளை வாங்கிவைத்து அந்த தேசத்தில் விற்பனைசெய்ய ஒப்புக்கொண்டிருக்கின்றன. ப்ரான்ஸிலுள்ள லையான்ஸ் என்னுமிடத்துக்கும் மாதிரிக்கு ஸாமான்களை அனுப்பினதில் ப்ரான்ஸிலும் இந்த ஸாமான்களுக்கு க்ராக்கி ஏற்பட்டிருக்கிறது.

காலக்ரமத்தில் பீட்ரோக்ராடில் வீட்டுக் கைத்தொழில் வர்த்தமான ஆபீஸ் ஒன்று ஏற்படுத்தி, அங்கே மாதிரிக்கு எல்லா ஸாமான்களையும் சேகரித்து வைத்து, படங்களுள்ள காட்லாக்குகள் தயார்செய்ய வேண்டுமென்றும், கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களைச் சேகரித்து தொழிலாளிகளுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் உத்தேசித்திருக்கிறார்கள். இது சரிவர நடக்குமானால், பாரிஸிலும் ஒரு சாச்வதக் காட்சிசாலை ஏற்படுத்தி, அங்கே பார்க்க வருபவர்களுக்கு ஏதாவது தேவையாயிருந்தால், அவைகளை ரஷ்யாவிலிருந்து தருவித்துக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்போகிறார்கள். காலக்ரமத்தில் வேண்டுமானால் இங்கிலண்டிலும் காட்சிசாலை ஏற்படுத்தப்படும். இவைகளெல்லாம் சரிவர நடந்துவரும்படி செய்தபிறகு, கவர்ன்மெண்டார் இவைகளின் மேற்பார்வையை ஸ்தல ஸ்தாபனங்களிடம் விட்டுவிடுவார்கள்.

## ARTIFICIAL WOOD.

### செயற்கை மரம்.

சென்ற சில வர்ஷங்களாக மரங்களின் விலை நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டுவருகிறது. 1914-ம் வர்ஷத்தில் யுத்தம் ஆரம்பித்ததும் இதைப்பற்றி அநேகர் கவனிக்கலானார்கள். இப்போது ஒரு ப்ரெஞ்ச் நிபுணர் செயற்கை மரம் தயார்செய்ய ஒருமுறை கண்டுபிடித்திருக்கிறார். இந்த முறை ஸுலபமாகவும் செலவு குறைவாகவும் இருப்பதோடு, அதற்கு ஒரே ஒரு யந்த்ரம் மாத்ரம் வேண்டியிருக்கிறதாம்.

செயற்கைமரம் செய்ய உபயோகிக்கும் மூலப்பொருள் வைக்கோலாகும். வைக்கோலை முதலில் அதற்கென்று செய்யப்பட்ட ஒரு கருவியால் நீளப்போக்கில் கிழித்து விடுகிறார்கள். பிறகு அதை ஒரு யந்த்ரத்தில்போட்டு அதோடு வேறு சில ஸாமான்களையும் சேர்க்கிறார்கள். பிறகு நீராவியால் ஒரு குறிப்பிட்ட அளவு உஷ்ணம் கொடுக்க வைக்கோலும் அதோடு வைத்திருக்கும் பொருள்களும் சமைந்து பதமாகின்றன. வேண்டிய அளவுக்கு



பக்குவமான பிறகு, அதன்மேல் பாரம் வைத்து அமிழ்த்துகிறார்கள். ரொம்பவும் அமிழ்த்தினால் வைக்கோலின் நாரும் அதோடு சேர்ந்திருக்கும் பொருள்களும் ஒன்றுசேர்ந்து கெட்டியான பலகைபோலாகிறது. எவ்வளவு பருமனாகவும் அகலமாகவும் வேண்டுமானாலும் மரத்தை உண்டு பண்ணிக்கொள்ளலாம். யந்த்ரத்திலிருந்து மரம் வரும்போது ரொம்ப நீளமாக இருக்கும். வேண்டிய நீளத்துக்கு அதைத் துண்டுகளாக நறுக்கிக்கொள்ளலாம்.

இது பார்வைக்கு ஸாதாரண மரம்போலவே இருக்கும். ரம்பத்தால் அறுத்தால் சரியாக அறுபடும். சிலும்புகள் உண்டாகா. அது ஸுமாராய் உறுதியுள்ளது. பற்பல வேலைகளுக்கு அதை உபயோகிக்கலாம். வேலைக்கு உபயோகிக்கையில் அது கொறுங்கி உடைந்துபோவதில்லை. அதில் ஆணியடித்தால் பிளந்து போவதில்லை. கனடாதேசத்தில் கோதுமை நிலங்களில் கோதுமை வைக்கோல் ஒன்றுக்கும் உதவாமல் வீணாகப்போகிறதாம். அதை உபயோகித்து மேற்சொன்ன யந்த்ரத்தில் தாழ்ந்தவகை செயற்கை மரம் செய்யலாமென்று சொல்லப்படுகிறது. இந்த செயற்கை மரத்தை விறகாக உபயோகிக்கலாமாம். இதர விறகுகளைவிட இது மலிவாம். இது அதிக புகை கட்டாமல் நல்ல ஜ்வாலையுடன் எரிவதோடு அதிக உஷ்ணமும் கொடுக்கிறதாம்.

மேற்கூறிய ப்ரெஞ்ச் நிபுணர் இந்த செயற்கை மரத்திலிருந்து நெருப்புக்குச்சி செய்ய ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறார். இந்த நெருப்புக்குச்சிகள் ஸாதாரண மரக்குச்சிகளைப் போலவே இருப்பதோடு, விலைமலிவாயும் இருக்கின்றனவாம். இவை நன்றாக எரிகின்றனவாம். நெருப்புக் குச்சியின் நுனியிலுள்ள மருந்தும், எரிந்த பாகமும் கீழே விழுவதில்லையாம்.

சில மருந்துப் புட்டிகளை ஒருவகை அட்டையில் சுற்றிக் கட்டிவருவதைப் பலர் பார்த்திருக்கலாம். அட்டையின் உள்பக்கம், அதாவது புட்டிகளை ஒட்டியிருக்கும் பக்கம் இடைக்கிடை மேடுபள்ளமாக இருக்கும்படிக்கும், மேல்பக்கம் ஸாதாரணமாயிருக்கும்படிக்கும் தயார் செய்யப்பட்டிருக்கும். இந்த அட்டையைப் போலவே செயற்கை மரத்தால் அட்டை செய்ய முடியுமாம். செயற்கைமர அட்டை கடுதாசி அட்டையைவிட உறுதியாய் இருக்கிறதாம். புட்டிகளுக்கு சுற்றுவதில் இது ரொம்ப ச்ரேஷ்டமானதாயிருக்கிறதாம்.

## MARKETING FUNCTIONS.

### விற்பனை ஏற்பாடு.

வியாபாரத்தில் பொருளைச் செய்வோரிடமிருந்து அவைகளை உபயோகப்படுத்துவோருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கான வேலையில் தாகர்களென்றும், ஏஜெண்டுகளென்றும், கடைக்காரர்களென்றும் பலர் இருந்து பொருளைச் செய்பவர் விற்கும் விலைக்கும் வாங்குவோர் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்யாஸத்தை பெறுகிறார்கள். இடையிலுள்ளவர்களின் ஸங்க்யையைக் குறைத்தால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கும் பணத்தில் பெரும்பாகம் மிச்சமாகுமென்றும், அதனால் பொருளை உபயோகிப்போருக்கு ஸாமானின் விலை குறையுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். நடுவில் உள்ளவர்கள் போனாலும் அவர்கள் செய்யவேண்டிய வேலை போய்விடாதாகையால், ஸாமானின் விற்கும் விலை ரொம்ப குறையுமா என்பது ஸந்தேகம். செய்பவரிடமிருந்து வாங்குபவரிடம் ஸாமான்

போவதில் நடக்கவேண்டிய வேலைகள் இன்னவை யென்றும், எப்படிப்பட்டவையென்றும் கீழே விவரிக்கிறோம். அந்த வேலைகளை ஸாதாரணமாக 7-வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன.

(1) ஸாமான்களை சேகரித்தல் (2) ஸாமான்களை பத்ரப்படுத்துதல் (3) நஷ்டத்திற்கு பாத்யப்படுதல் (4) வ்யாபாரத்திற்கு முதல்வைத்தல் (5) ஸாமான்களை தினுஸுவாரியாகப்பிரித்து வேண்டிய அளவாகக் கட்டிவைத்தல் (6) விற்பனைசெய்தல் (7) ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புதல் ஆகிய இவைகளாகும்.

ஸாமான்களை சேகரித்தல்.

வெகு காலத்திற்குமுன், அந்தந்த இடத்தில் உண்டானபொருள்கள் அங்கங்கே வஸித்துவந்த ஜனங்களுக்குப் போதுமானவைகளா யிருந்தபொழுது, தூரதேசங்களிலிருந்து ஸாமான்களை வாங்கி வரவேண்டிய அவச்யம் இல்லாமலிருந்தது. இப்பொழுது ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமான ஸாமான்களைச் செய்வது வழக்கமாக இருக்கிறபடியால், அங்கங்கே அகப்படாத ஸாமான்களை அவைகள் உண்டாகும் இடங்களிலிருந்து கொண்டுவரவேண்டுவது மிகவும் அவச்யமாக இருக்கிறது. எந்தெந்த ஸாமான் எங்கெங்கே கிடைக்குமென்று விசாரித்து அவைகளைக் குறைந்த விலைக்கு வாங்கவேண்டும். பெரிய வ்யாபாரிகள் தங்களுடைய சம்பளஆட்களை அநேக இடங்களுக்கு அனுப்பி அவ்விடங்களிலுள்ள ஸாமான்களின் குணாகுணங்களைத் தெரிந்துகொண்டு அவைகளைக் குறைந்தவிலைக்கு வாங்கச்செய்கிறார்கள். சில பெரிய வ்யாபாரிகள் பெரிய வ்யாபார ஸ்தலங்களில் ஸாமான் வாங்குவதற்காக இடங்கள் வைத்திருக்கிறார்கள். வெளி தேசங்களிலிருந்து ஸாமான்களை வாங்கும் வேலையை இறக்குமதி செய்கிறவர்கள் என்னும்வ்யாபாரிகள் பெரும்பாலும் செய்துவருகிறார்கள்.

சில ஸமயங்களில் வெளிதேசத்து ஸாமான்களை வாங்குவது கஷ்டமானதாகவும், அதிகச் செலவுள்ளதாகவும் ஆகிவிடுகிறபடியால், சில்லரை வ்யாபாரிகள் பெரிய வ்யாபார ஸ்தலங்களில் நிலையாய் வஸிக்கும் ஏஜெண்டுகளைத் தங்களுக்கு ஸாமான்கள் வாங்கி அனுப்பும்படி அமர்த்திக் கொள்ளுகிறார்கள். அந்த ஏஜெண்டுகள் அப்போதைக்கப்போது ஸாமான்கள் விற்கும் விலையைச் சில்லரை வ்யாபாரிகளுக்குத் தெரிவித்து வருகிறார்கள்.

பலத்த வ்யாபாரம் செய்கிறவர்கள் சில்லரை வ்யாபாரிகளின் மூலமாய் ஸாமான்களை வாங்குவதில்லை. அவர்கள் தங்கள் உத்யோகஸ்தர்களை ஸாமான்கள் உண்டாகு மிடங்களுக்கு அனுப்பி நல்ல ஸாமான்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

கொஞ்ச காலத்திற்குமுன், அமெரிக்காவில் க்ராமாந்தரங்களிலுள்ள வ்யாபாரிகள் ஸாமான்கள் வாங்குவதற்காக வர்ஷத்திற்கு இரண்டு தடவை பெரிய பட்டணங்களுக்குப் போய்வருவது வழக்கம். இது மிகவும் கஷ்டமானதாகவும் செலவுள்ளதாகவும் இருந்தது. அதனால் கால நஷ்டம் உண்டானதோடு, நல்ல ஸாமான்களைப் பார்த்து வாங்கவும் முடியாமலிருந்தது. வ்யாபாரிகள் விற்கக் கூடியதைவிட அதிகமான ஸாமான்களை வாங்கிவிடுவார்கள். க்ராமங்களிலுள்ள வ்யாபாரிகளுக்கு இப்பொழுது பட்டணங்களிலுள்ள வ்யாபார ஏஜெண்டுகள் ஸாமான்களை வாங்கித்தருகிறார்கள்.

ஸாமான்களை வாங்குவது வ்யாபாரத்தில் மிகவும் முக்யமான வேலை. பெரிய வ்யாபாரிகளும் கமிஷன் வ்யாபாரிகளும் தங்களுடைய உத்யோகஸ்தர்களைப் பற்பல இடங்களுக்கு அனுப்பி எந்தக் காலத்தில்எங்கே எந்தவஸ்து அகப்படுமோ அதையெல்லாம் அப்போதைக்



கப்போது வாங்கிக்கொள்ளுகிறார்கள். வ்யவஸாயப் பொருள்களையும் கைத்தொழிற் பொருள்களையும்வாங்கும் வேலையைத் தரகர்களும் செய்து வருகிறார்கள். அவர்கள் அநேகமாய் விற்பவர்களுக்காகவே பாடுபடுவார்கள்.

ஸாமான்களைச் சேகரித்து பத்ரப்படுத்துதல்.

ஸாமான்களை ஸௌகர்யமான இடங்களில் சேகரித்து வைக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு இடத்து வாடகை, ஸாமான்களை வைக்கக் கூலி, வ்யாபார முதலுக்கு வட்டி ஆகிய செலவுகள் உண்டு. ஸாமான்களைச் செய்கிறவர்கள் இந்த வேலையில் கொஞ்சம் செய்ய வேண்டியவர்களா யிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இந்த வேலையைக் கூடுமான வரையில் நடுவிலுள்ள வ்யாபாரிகளின் பொறுப்பில் விட்டு விடுகிறார்கள். கைத்தொழிற் சாலையார் ஸாமான்கள் இவ்வளவு தேவையென்று யாராவது கேட்ட பிறகு ஸாமான்களைச் செய்வது நல்லதென்று எண்ணுகிறார்கள். அப்படிச் செய்தால் ஸாமான்கள் செய்தானதும் அவைகளை வேண்டியவர்களுக்குச் சீக்ரத்தில் கொடுத்து விடலாம். ஆனால் எல்லாக் கைத்தொழிற் சாலையாரும் அந்த மாதிரி செய்யமுடியாது. அநேகர் முன்னதாகவே ஸாமான்களைச் செய்து, விற்பதற்காகத் தங்களிடம் வைத்துக்கொண்டிருக்கவேண்டி யிருக்கிறது. கைத்தொழிற் சாலையார் சில்லரைக் கடைகளுக்குத் தங்கள் ஸாமான்களை நேராக விற்றாலும், அல்லது தங்களிடம் வாங்குகிறவர்களுக்குத் தங்கள் சொந்த சில்லரைக் கடைகளின் மூலமாக விற்றாலும், அவர்கள் ஸாமான்களை ஏராளமாகச் செய்து தங்கள் வர்த்தகசாலைகளிலும் அந்த ஸாமான்கள் விற்கக்கூடிய பற்பல இடங்களிலும் தயாராய்க் கையிருப்பில் வைத்திருக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் ஸாமான்களைச் சேகரித்து வைக்கும் செலவுகள் நடுவிலுள்ள வ்யாபாரிகளின் பொறுப்பில் இல்லாமல் கைத்தொழிற் சாலையாரின் பொறுப்பிலேயே இருக்கிறது.

சில்லரை வ்யாபாரிகளும் தங்கள் கடைகளில் ஸாமான்களைக் கையிருப்பில் வைத்துக் கொள்வதற்காகச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஸாமான்களை மொத்தமாக வாங்காமல் அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாக வாங்கிக் கொள்வதினால் ஸாமான்களைச் சேகரித்து வைக்கும் செலவு மட்டுப்படும். ஸாமான் விற்பவர்களே அந்தச் செலவைப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள். சில்லரை வ்யாபாரிகளுக்கு ஸாமான்கள் விற்கும் வ்யாபாரிகள் தங்கள் கடைகளில் தேவையான ஸாமான்களைக் குறைவில்லாமல் எப்பொழுதும் தயாராய் வைத்திருக்கவேண்டும். சில்லரை வ்யாபாரிகள் அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாய் ஸாமான்களை வாங்கி வருகிறபடியால் அவர்களுக்கு ஸாமான் விற்பதற்காக அநேக இடங்களில் கடைகள் ஏற்படுகின்றன. சில்லரை வ்யாபாரிகள் ஸாமான்கள் வாங்கும் கடைகள் கூடுமானவரையில் அவர்களுக்கு ஸமீபத்தில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் கால நஷ்டமில்லாமல் அவர்கள் ஸாமான்களை வாங்கிக்கொள்ள ஸௌகர்யமாயிருக்கும். சில்லரை வ்யாபாரிகளுக்கு ஸாமான் விற்கும் பெரிய வ்யாபாரிகளும் கைத்தொழிற் சாலையாரிடமிருந்து ஸாமான்களை அப்போதைக்கப்போது கொஞ்சங் கொஞ்சமாக வாங்கவே முயன்று வருகிறார்கள். அதனால் கைத்தொழிற் சாலையாரிடம் வேலைதீர்ந்த ஸாமான்கள் ஏராளமாகக் கையிருப்பில் இருந்துகொண் டிருக்கின்றன. தரகர்களுக்கும், கைத்தொழிற்சாலையாரின் ஏஜெண்டுகளுக்கும், ஸாமான்கள் வாங்கும் ஏஜெண்டுகளுக்குந் தான் ஸாமான்களைச் சேகரித்து பத்ரப்படுத்தி வைக்கும் செலவென்பது கிடையாது.

ஸாமான்களைச் சேகரித்துக் கையிருப்பில் வைத்துக்கொள்ளும் வேலை சில ஸந்தர்ப்பங்களில் அதிகக் கஷ்டமானதாகவும் செலவுள்ளதாகவும் இருக்கிறபடியால் அந்த வேலையைச் செய்வதற்கென்று சில வ்யாபாரிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெரிய பட்டணங்களில் பண்டகசாலைகளை வைத்து அவைகளில் எல்லா விதமான ஸாமான்களையும் வாங்கிக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுகிறார்கள். அட்லாண்டிக் கரையோரத்திலுள்ள சர்க்கரை வ்யாபாரி அநேக இடங்களில் தன் சர்க்கரையைக் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். அப்படிச் செய்வதற்காக அவன் பலவிடங்களிலும் தன் ஸொந்தக் கடைகளையாவது ஸ்தாபிக்கவேண்டும், அல்லது பண்டகசாலைகளில் வாடகைக்காவது இடம் வாங்கிக்கொள்ள வேண்டும். வாடகைக்கு இடம் வைத்துக்கொள்வதே அவனுக்கு லாபமானது. அதனால் அதிகச் செலவு பிடிக்காது. பெரிய மாம்ஸ வ்யாபாரிகள் அநேக இடங்களில் தங்கள் ஸொந்தக் கடைகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் வ்யாபாரம் ஸாதாரண வர்த்தகசாலைகளில் செய்ய முடியாததனாலும், வ்யாபாரம் அதிகமாக நடக்கிறபடியினாலும் ஸொந்தக் கடைகள் வைத்துக் கொள்வதே அவர்களுக்கு லாபகரமாக இருக்கிறது.

ஸாமான்களைச் சேகரித்து கையிருப்பில் வைக்கும் வேலை ஸாமான்களைச் செய்கிறவர்கள் முதலாக அவைகளை வாங்கி உபயோகிப்பவர்கள் வரையிலுமுள்ள எல்லோருக்கும் இருக்கிறது. ஸாமான்களை வாங்கி உபயோகிப்பவர்கள்கூட அவைகளை அதிகமாக வாங்கினால் இந்த வேலையைச் செய்ய வேண்டியவர்களாகிறார்கள். உதாரணமாக, நம்முடைய வீடுகளில் வர்ஷாந்திரப் பண்டங்கள் வாங்கி காப்பாற்றி வைக்கக் கஷ்டப்படுவது எல்லாருக்கும் தெரியும். ஆனால் வாங்குகிறவர்கள் இந்த வேலையை நடுவிலுள்ள வ்யாபாரிகளின் பொறுப்பில் விட்டுவிட வேண்டுமென்று எண்ணுகிறார்கள். அதாவது அப்போதைக்கப்போது வேண்டியவைகளை மாத்ரம் வாங்கிக் கொள்ள முயலுகிறார்கள்.

### நஷ்டத்திற்கு பாத்யப் படுதல்.

கமிஷன் வ்யாபாரிகளும் தரகர்களும் ஏஜென்டுகளும் தங்கள் பொறுப்பில் ஸாமான்களை வாங்குவதில்லையாதலால் வ்யாபார நஷ்டங்களுக்கு அவர்கள் அதிகமாக பாத்யப்பட வேண்டுவதில்லை. மற்ற எல்லா வ்யாபாரிகளும் நஷ்டத்திற்கு பாத்யப்பட வேண்டியவர்கள் தான். விலையின் ஏற்றத் தாழ்வினாலும், நெருப்பினால் அழிந்து போவதினாலும், வஸ்துவின் தன்மை கெட்டுப்போவதினாலும், ஜனங்களுடைய ப்ரியம் மாறுவதினாலும், பணநஷ்டத்தினாலும் வ்யாபாரத்தில் நஷ்டமுண்டாகும்.

விலையின் ஏற்றத் தாழ்வினால் நஷ்டம் அதிகமாக உண்டாகிறது. ஆனால் அது ஸாமானுடைய தன்மைக்குத் தகுந்தாற்போலிருக்கும். குறிபோட்டு அல்லது குறிப்பிட்ட பெயரிட்டு விளம்பரம் செய்யப்பட்ட ஸாமான்கள் அநேகமாய் ஒரே விலையில் விற்கப்படுகின்றன. ஆனால் சண்டை நடக்கும் ஸமயங்களில் அவைகளின் விலைகளும் ஒரே நிதானமாய் இருக்காமல் மாறுபடுகின்றன. பெரிய வ்யாபாரிகள் கொஞ்ச லாபம் வைத்துக்கொண்டு ஸாமான்களை விற்று வருகிறபடியால் விலையின் ஏற்றத் தாழ்வினால் சில்லரை வ்யாபாரிகளைவிட அவர்களுக்கு அதிக நஷ்டமுண்டாகிறது. மாவு, சர்க்கரை முதலிய வஸ்துக்களின் விலை அடிக்கடி அதிகமாகவோ குறைவாகவோ ஆகிவிடுகிறபடியால், அவைகளை வைத்துக்கொண்டு வ்யாபாரஞ் செய்யும் பெரிய வ்யாபாரிகளுக்கு அதிகமான நஷ்டம் உண்டாகிறது. விலையின் ஏற்றத் தாழ்வினால் லாபமடைய எண்ணி வ்யாபாரம் செய்கிறவர்கள் துணிந்து வ்யாபாரம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட வ்யாபாரிகளுக்கு நஷ்டம் வந்தாலும் வரும், லாபம் வந்தாலும் வரும். கோதுமை முதலிய தான்யவகைகளையும், பருத்தி, சர்க்கரை, காப்பிக்கொட்டை முதலிய வஸ்துக்களையும் வைத்துக்கொண்டு வ்யாபாரம் செய்கிறவர்கள் லாப நஷ்டம் இரண்டுக்கும் பாத்யப்பட்டுத் துணிந்து தான் வ்யாபாரம் செய்யவேண்டும். ஏனெனில் அவைகளின் விலை ஒரு ஸமயம் இருப்பதுபோல் இன்னொரு ஸமயம் இருப்பதில்லை. இம்மாதிரி லாப நஷ்டங்களுக்கு பாத்யப்பட்டு வ்யாபாரம் செய்கிறவர்களை ஒரு தனி வகுப்பினராகச் சொல்ல வேண்டும். அவர்கள் எப்பொழுதும் அம்மாதிரி வ்யாபாரமே செய்துகொண்டிருப்பார்கள்.



நெருப்பினால் உண்டாகும் நஷ்டங்களுக்கு இப்பொழுது இன்ஷியூரன்ஸ் கம்பெனியார் உத்திரவாதிகளாக நிற்கிறார்கள். வஸ்துக்கள் அதிக நாள் வைத்திருந்தால் குணத்தில் கெட்டுப்போகின்றன. இவைகளினால் நஷ்டமுண்டாகிறது. சில வஸ்துக்களைக் காப்பாற்றி வைப்பதில் சில தனிமுறைகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அவைகளை அப்படி வைக்காவிட்டால் கெட்டுப்போகும்.

கைத்தொழிற் பொருள்களின் மாதிரி அடிக்கடி வேறுபடுவதினாலும் நஷ்டமுண்டாகிறது. புருஷர்களும் ஸ்திரீகளும் தங்கள் உடையின் மாதிரியை அடிக்கடி மாற்றி வருகிறார்கள். இப்பொழுது ஒருமாதிரியான உடையை வாங்குகிறார்கள். கொஞ்சகாலத்திற்குப் பிறகு வேறு மாதிரி வேண்டுமென்கிறார்கள். அவர்கள் முன்போல் வாங்குவார்களென்றெண்ணிப் பழைய மாதிரியில் செய்த உடைகளை விலை குறைவாகவே விற்கவேண்டும். அதனால் நஷ்டமுண்டாகிறது. கடன்களைச் சரியாக வசூல்செய்ய முடியாமையாலும் பணநஷ்டமுண்டாகிறது.

## BOOKS OF THE MONTH.
## புதிய புஸ்தகங்கள்.

**தோத்திரப் பாமாலை.**

இது வேலூர் போலீஸ் ஸ்கூலைச்சேர்ந்த வி. ஸுப்பய்யர் இயற்றியது. இதில் பற்பல ஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின்மேல் பாடிய ஸ்தோத்ரங்கள் பல அடங்கி யிருக்கின்றன. செய்யுள் நடை சொற்சுவை பொருள்சுவை யுடையதாக அமைந்துள்ளது. இது யாவருக்கும் பயன் படக்கூடியது. மாதிரிக்கு அடியில் சிலபாட்டுகள் தருகிறோம். இதன் விலை அணா 6. வேண்டுவோர் இதனாசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**மதுரை மீனாம்பிகை பஞ்சகம்.**

1. சதுர்மறையுஞ் சாத்திரமுஞ் சங்கீதமுஞ்
சலியாதே சாற்றிப் போற்றும்
மதுரையெனு முதுநகருண் மணிபோ
லும் விளங்குகின்ற மாதே வன்றன்
இதம்பெருகு மிடப்பாகத் தமர்ந்தவளைக்
கயற்கண்ணி எழிற்பூங் கோதைச்
சதம்நினைந்து சகலவினை பறந்தோடப்
பணிவதற்கே சார்ந்து வாரீர்.

2. பணியவருள் பார்வதியைப் பக்தர்களின்
மனக்களிப்பைப் பழமை வாய்ந்த
அணியழகு செய்வதொக்கு மாபரண
முடையவளை யகில மெல்லாந்
தனியுரிமை பூண்டவளைத் தக்கனது
தவக்கொடியைத் தகைமை வாய்ந்து
பணியுலவு கண்டனது பங்கினளைப்
போற்றவின்றே பாங்காய் வாரீர்.

3. போற்றுமொரு புண்ணியளைப் பொற்
கொடிபோ லாடுமிடைப் புகழ்பூங் கொம்பைத்
தோற்றமிகு சுந்தரியைச் சொலிக்குமுக
முடையவளைச் சோதி வைகை

184838 சென்னை-600 028

யாற்றருவி ... யன்பருக்
யக ... க்குந்
தேற்றமிகு செழும்பொருளைத் தெளிந்
துபா மாலைகொண்டு சேர்க்க வாரீர்.

ஏகாம்பரேச்வர பஞ்சகம்.

3. காத்தருள்வை நீயென்று கசிந்துநான்
மன்றுடிக் கனிவ தாக
ஏத்தவருள் தான்கொடுத்து மீசாவின்
தாளதனை இனிது காட்டி
மாற்றலரின் வசைகளைநான் மதியாத
மனமடைய வழியே தந்து
தேற்றவிரி யுலகினிடை திரிந்துலவ நல்
லருளைச் செய்யே கம்பா.

4. அருள்வையென வனுகினமு மறையுமன
முவந்திலங்க வன்பு கொண்டே
தருவைபெலாஞ் சிறப்புடனே சகியோடு
உரையுமனந் தானின் புற்றே
தெரிவையர்கள் நிறைந்துவளர் தேன்
பொழியுங் காஞ்சிநகர்ச் செல்வனை
பரவைமனை பரிந்துசென்ற பரமசிவக்
கொழுந்தான பதியே கம்பா!

கீத மஞ்சரி. *

ராவ் ஸாகிப்-பி. ஸம்பந்தமுதலியார் இயற்றிய பற்பல நாடகங்களில் வந்துள்ள கீதங்களை அவர் ஒருங்குசேர்த்து மேற்கண்ட பெயருடன் தனிப்புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார். இந்தப் புஸ்தகத்தில் அவருடைய நாடகங்கள் ஐந்தில் வந்துள்ள ஸுமார் 120 பாடல்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை காலஞ்சென்ற தாயுமான ஸாமி முதலியாராலும் கோபாலாசார்லுவாலும் கவனம் செய்யப்பட்டவை. லீலாவதி ஸுலோசனையில் வந்துள்ளவை ஸம்பந்த முதலியாரே இயற்றியவை. இந்த நூல் இவரது நாடகங்களை நடித்துக்காட்டும் கம்பெனிகளுக்கும் நாடக ஸபைகளுக்கும் பெரிதும் பயன்படும். இதன் விலை அணா 8.

சிறுவர்க்காகும் கதைப் பூங்கொத்து.

இது வி. கோ ஸூர்ய நாராயண சாஸ்திரியார் புத்ரர் வி. எஸ். நடராஜன் எழுதியது. பள்ளிக்கூடங்களில் ப்ரதம வகுப்புகளில் உபயோகப்படும்படி எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஸமயோசிதமான நீதிச் செய்யுளும் வாக்யங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 2½. வேண்டுவோர் மதுரை, காக்காத்தோப்புத் தெரு, 735-ம் நம்பர் வீட்டிலுள்ள இதனாசிரியருக்கு எழுதிப் பெறலாம்.

மரியாதை ராமன் அல்லது பால நியாயாதிபதி.*

சிறுவர்க்கான கதைப் புஸ்தகங்கள் எழுதுவதில் தேர்ந்த வரகவி திரு அ. ஸுப்ரமண்ய பாரதியார் மரியாதை ராமன் கதையின் முதல் கதையை நாடகரூபமாக அமைத்திருக்கிறார். இது எளியநடையில் எழுதப்பட்டிருப்பதால், பள்ளிக்கூடச் சிறுவர்கள் நடித்துக் காட்ட மிகவும் உபயோகமாகும். இதன் விலை அணா 6.

அம்ருதவல்லி.*

இது மலைமகள் என்று புனைவுபெயர்பூண்ட ஒரு ஹிந்துமாதால் எழுதப்பட்ட கதையாகும். இதன் நடை உயர்ந்ததாகவும் இனிமையாகவும் இருக்கிறது. இதன் விலை அணா 10.

நந்தனார்.*

இது சிவபக்தர்களுள் ஒருவராகிய நந்தனாரின் சரித்ரத்தை நாடகமாக விளக்கிக் காட்டுவது. இதை இயற்றியவர் டி. ஜி. ராகவாசார்யாராகும். இதில் இடையிடையே தெரிந்தெடுத்த நந்தன் சரித்ர கீர்த்தனைகள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது யாவரும் வாசிக்கக் கூடியபடி ஸுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 12.

காந்தாமணி.*

இதுவும் மேற்படியார் இயற்றிய ஒரு நாடகமாகும். இதன் கதைப் போக்கு நேர்த்தியாயும் நடை ஸுலபமாகவும் இருக்கின்றன. விலை அணா 8.

* இந்த குறிப்பிட்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி 3, 4, கொண்டி செட்டித் தெருவுக்கு, எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.